
# பண்பின் சிகரம்

(பத்மபூஷன் டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம்
அவர்களின் 97-வது பிறந்தநாள் வெளியீடு)



அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 043

## பதிப்பாசிரியரைப் பற்றி ....



முனைவர் திருமதி இராசம்மாள் பா. தேவதாஸ், தமிழகத்தின், கோயம்புத்தூரில் சிறப்பாக இயங்கும் அவினாசிலிங்கம் பல்கலைக் கழகத்தின் வேந்தர் ஆவார்கள். அவர்கள் உலகம் அறிந்த சத்துணவு விஞ்ஞானி. இவர் தனது பி.எச்.டி. பட்டத்தை 1950–ல் அமெரிக்கா விலுள்ள ஓஹையோ மாநிலப் பல்கலைக் கழகத்திலும், டி.எஸ்ஸி. பட்டத்தை 1978–ல் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பெற்று, அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தில் முதல் துணை வேந்தராகவும் (1988–1994), ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியின் முதல்வராகவும் (1960–80), மத்திய அரசின் புதுதில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திலும் (1975–76) சத்துணவு உதவி இயக்குநராகவும், தலைமை மனை பொருளியலறிஞர் மற்றும் இணை இயக்குநராகவும் (மனையியல்), விரிவாக்க இயக்குநராகவும், உணவு மற்றும் விவசாயத் துறை, இந்திய அரசு (1955–61); பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக் கழகத்தில்

(தொடர்ச்சி பின் அட்டையில்)

# பண்பின் சிகரம்

(பத்மபூஷன் டாக்டர் தி. சு. அவினாசிலிங்கம்
அவர்களின் 97-வது பிறந்தநாள் வெளியீடு)

பதிப்பாசிரியர்

டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ்

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 043

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUC
(DEEMED UNIVERSITY)
150166
LIBRARY

முதற்பதிப்பு மே, 2000

வெளியிடுவோர்

பதிவாளர்,
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் – 641 043.

Rs' 50/-

அச்சிட்டோர்

சாரதாலயா அச்சகம்,
ஸ்ரீ அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள்
கோயமுத்தூர் – 641 043.

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை .... I

1. **Tribute to Rev. Ayya Avargal** .... 1
*M. Chandramani*

2. பண்பின் சிகரம் அய்யா அவர்கள் .... 5
*சரோஜா பிரபாகரன்*

3. **Ayya whom I have known** .... 13
*P. Parvathi Easwaran*

4. அய்யா அவர்கள் என் வழிகாட்டி .... 16
*இர. சந்திரா*

5. அதிசய அய்யா நம்முடன் இருந்தால்... .... 20
*என். ஜெயா*

6. அய்யா அவர்களின் அருங்குணங்கள் .... 21
*சத்தியவதி முத்து*

7. எந்தன் நோக்கில் அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் .... 29
*ஹேமலதா நடேசன்*

8. **A Tribute to a guiding star Ayya Avargal** .... 38
*Sarojini Gopalakrishnan*

9. அன்புச் செல்வர் அய்யா அவர்கள் .... 39
*சரோஜினி சுகுமார்*

10. **My ponderings on Ayya Avargal and his Loyals** .... 45
*Janet Vijaya Light*



...TITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCA...
( DEEMED UNIVERSITY )

11. அய்யா அவர்களின் ஆள்வினையுடைமை .... 48
*கே. தங்கமணி*

12. மெய்யொளி .... 50
*பெ. பார்வதி*

13. அய்யா அவர்கள் எங்கள் அணையா விளக்கு .... 51
*அ. இராஜேஸ்வரி*

14. எந்தன் நோக்கில் அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் .... 57
*என்.வி. புஷ்பாபாய்*

15. அய்யனே எமது சற்குரு — ஒரு மகத்தான ஊற்று .... 59
*வி. இராஜம்*

18. என் மனதில் நிறைந்த அய்யா அவர்கள் .... 62
*கௌரி இராமகிருஷ்ணன்*

19. நான் கண்ட அய்யா அவர்கள் .... 65
*சியாமளா விசயவதி*

20. நான் சந்தித்த மகான் .... 67
*யூ. ஜெரினாபீ*

21. அய்யா அவர்கள் காட்டிய வழியில் .... 69
*பி. சாந்தி*

22. என் வாழ்வில் அய்யா அவர்கள் .... 71
*இரா. பரிமளா*

23. அன்பின் தெய்வம் எங்கள் அய்யா அவர்கள் .... 72
*தி. திலகவதி*

24. வள்ளலாரும், அய்யா அவர்களும் .... 78
*த. முருக ஜெயந்தி*

| | | | |
|---|---|---|---|
| 25. | 'மனிதருள் மாணிக்கம்' அய்யா அவர்கள்<br>*சு. கௌசல்யா* | .... | 83 |
| 26. | கருணை வடிவான அய்யா அவர்கள்<br>*உஷா சந்திரசேகர்* | .... | 88 |
| 27. | தமிழ்த்தாய் புதல்வர்<br>*து. லலிதா* | .... | 90 |
| 28. | கல்விக்கோர் ஆலயம் அமைத்தவர்<br>*என். ஜெயபூரணி* | .... | 91 |
| 29. | சத்திய சோதனை நாயகன்<br>*ஜீ.பி. ஜெயந்தி* | .... | 92 |
| 30. | நம் அய்யா அவர்கள்<br>*ஜி. பாரதா* | .... | 96 |
| 31. | எங்கள் அய்யா அவர்கள்<br>*வெங்கடலட்சுமி* | .... | 98 |
| 32. | இலட்சிய மலரோன்<br>*இரா. சுசீலா* | .... | 99 |
| 33. | தவமென்ன செய்தீர் அய்யா!<br>*வி.பி. ருக்மணி* | .... | 102 |
| 34. | ஆசார சீலர்<br>*ஆர். சாந்தா* | .... | 104 |
| 35. | உயர்ந்தவர்<br>*ஆர். இராஜலட்சுமி* | .... | 105 |
| 36. | அணையா ஜோதி<br>*கே. குழந்தைவேல்* | .... | 107 |

# முன்னுரை

நான் இராணி மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, நாடே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது. அண்ணல் காந்தியடிகளின் தலைமையில், அகிம்சை முறையில் சுதந்திரம் பெறத் தேசத் தலைவர்களும், தொண்டர்களும் பாடுபட்டார்கள். தென்னிந்தியாவில் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் முழுவதுமாக ஈடுபட்டுத் தலைசிறந்த பணி ஆற்றினார்கள். பலமுறை சிறை சென்றார்கள். 1947—ஆம் ஆண்டு சுதந்திரமும் வந்தது, நானும் இராணி மேரிக் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்தேன்.

கடலெனப் பொங்கிய உற்சாகத்துடன் இராணி மேரிக் கல்லூரி சுதந்திர தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட விழைந்தது. அப்பொழுது கல்வி அமைச்சராக விளங்கிய அய்யா அவர்களைக் கொடியேற்றி விழாப் பேருரை ஆற்ற அழைத்திருந்தோம். அவர்களும் அன்புடன் வந்திருந்தார்கள். நான் பலமுறை அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாலும், அவர்களை முதன் முறை சந்திக்கும் வாய்ப்பு அன்று தான் கிடைத்தது.

மேற்பட்ட படிப்பை அமெரிக்காவில் ஓஹியோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் தொடர மத்திய அரசு என்னைத் தேர்ந்தெடுத்துச் சலுகையும் அளித்தது. அங்கு

செல்வதற்கு முன்பு அய்யா அவர்களின் ஆசியைப் பெற்றுப் புறப்பட்டேன். அக்காலத்தில் இந்தியாவில் மனையியல் பாடம் என்பது பலரும் அறியாத ஒன்று. எனவே, யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற எண்ணி, மனையியலுக்கென்று தனிக் கல்லூரி ஒன்று நிறுவினால் அதன் பொறுப்பேற்று பணி செய்ய விரும்புவதாக அய்யா அவர்களுக்கு அமெரிக்காவிலிருந்து எழுதினேன். அய்யா அவர்களும் நான் தாயகத்திற்கு உருப்படியாகத் திரும்பினால் அதனைப் பற்றி யோசிக்கலாமெனப் பதில் அளித்திருந்தார்கள்.

வெளிநாடு சென்று உயர் கல்வியை வெற்றியோடு முடித்துத் திரும்பிய நான் அரசு செலவில் சென்றதினால் மத்திய அரசு வேலைக்குக் காத்து கொண்டிருந்த நேரத்தில் கோவையில் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்திலிருந்து அய்யா அவர்கள், தன்னை வந்து சந்திக்கும்படி எழுதினார்கள். அங்கு சென்ற நான்,

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே — நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்றே*

என்ற ஔவையார் பாடலுக்கேற்பச் சான்றோராகிய அய்யா அவர்களைக் காணவும், பேசவும் வாய்ப்பைப் பெற்றேன்.

1951—ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டில்லியில் உள்ள மத்திய அரசின் செவிலியர் பட்டப்படிப்பு படிக்கும்

மாணவியருக்கு ஆசிரியையாக நியமிக்கப்பட்டேன். 1952ஆம் ஆண்டு அங்கிருந்து பரோடா பல்கலைக் கழகத்தில் முதன் முறையாக அமைக்கப்பட்ட மனையியல் புலமுதன்மையினராக என்னை பொறுப்பேற்கும்படி அழைத்தார்கள். மனையியலுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று விரும்பிய எனக்கு இது மகிழ்ச்சியை அளித்தது. உடனே நான் பரோடா சென்று மனையியல் புலமுதன்மையர் பொறுப்பேற்றுச் சிறப்புடன் பணி செய்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்டவன் அருளால் திரும்பினேன்.

1955—ஆம் ஆண்டு மீண்டும் டில்லியில் மத்திய அரசு பணியில் அமர்த்தப்பட்டேன். 1952 ஆம் ஆண்டு அய்யா அவர்கள் மகளிர் கல்விக்காக அறக்கட்டளை ஒன்றை நிறுவினார்கள். அந்த அறக்கட்டளையின் நிரந்தர உறுப்பினர்களில் ஒருவராக என்னையும் நியமித்தார்கள். 1955—ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் உயர் நிலைப்பள்ளி உருவானது. இதுவே மனையியல் கல்லூரி ஆரம்பிக்க அடித்தளமாக விளங்கியது. 1957—ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது

அய்யா அவர்கள் தொடங்கிய மனையியல் கல்லூரிக்கு முதல்வராக நியமித்தார்கள். மத்திய அரசின் வேலையை வேண்டாமென ஒதுக்கி, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியின் முதல்வர் பொறுப்பேற்—றிருப்பதைக் கண்டு என் உறவினர் வருந்தினர். நண்பரில் சிலர் எள்ளி நகையாடினர்.

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்ப திழுக்கு.*

என்ற திருக்குறளுக்கேற்பத் திண்மையுடன் செயலில் ஈடுபட்டேன்.

ஆண்டவன் அருள், அய்யா அவர்கள் என் மேல் வைத்திருந்த அசையாத நம்பிக்கை, கொடுத்த ஊக்கம், அளித்த ஆலோசனைகள், கோவை அவினாசிலிங்கம் கல்விக் கோவிலில் முழு மனத்தோடும், எல்லையில்லா ஆர்வத்தோடும் பணி செய்யத் தூண்டியது. ஆசிரியர்களின் ஒத்துழைப்பாலும், பணியாளர்களின் அன்புப் பணியாலும் சான்றோர்களின் நல்வாழ்த்துக்களினாலும், மாணவியரின் அன்பு நிறைந்த உழைப்பாலும், பெற்றோர்களின் ஆதரவாலும் கல்லூரியும் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி இன்று பார் போற்றும் பல்கலைக்கழகமாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

அன்று முதன் முறையாகச் சேர்ந்த ஆசிரியைகளில் டாக்டர் நிர்மலா மூர்த்தியும், மாணவியரில் டாக்டர். பார்வதி ஈஸ்வரனும் நம் மத்தியில் இன்றும் பணியாற்றிக் கொண்டிருப்பதும்; கல்லூரி ஆரம்பித்த மறு ஆண்டிலேயே சேர்ந்த டாக்டர். கோதாவரி கமலநாதன் அவர்களும், டாக்டர் லக்ஷ்மி சாந்தா அவர்களும் அவினாசிலிங்கம் அறக்–கட்டளையின் உறுப்பினர்களாகச் செயல்பட்டு வருவதும் பாராட்டத்தக்கது.

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் இன்று ஆயிரக் கணக்கான மகளிரின் கல்விக் கண்ணைத் திறந்து வைக்கிறது. அய்யா அவர்கள்,

*மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி*
*அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்*
*கருமமே கண்ணாயினார்*

என்ற நீதிநெறி விளக்கத்திற்கேற்ப அல்லும், பகலும் தன் வாழ்நாள் முழுவதும் மகளிர் கல்விக்காக பாடுபட்டார்கள். அவர்களோடு பணிபுரியும் வாய்ப்பினைப் பெற்றிருந்த நான், அவர்களிடமிருந்து கற்றுக் கொண்ட பண்புகள் பல. வாழ்க்கையில் எளிமை, யாவருக்கும் உதவி புரிதல், எல்லோரிடத்திலும் அன்போடு பழகுதல், பிறருக்காகச் சலிக்காமல் உழைத்தல், உழைப்பில் உறுதி, மனத்திண்மை, ஆண்டவனிடத்தில் எல்லையற்ற பக்தி போன்ற நற்பண்புகளை எனது வாழ்க்கையில் முக்கிய பகுதியாக்கிக் கொள்ள முடிந்தது.

எந்தச் செயலையும் செய்வதற்கு முன்பு பலமுறை சிந்தித்தல், ஆற்றலுக்கு எல்லையுண்டோ என்ற மனநிலை, அன்னை சாரதா தேவியின் குழந்தை என்ற உறுதி, தன்னம்பிக்கை, குறித்த காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் பணி செய்து முடித்தல், அனைத்தையும் குறிப்பெழுதி வைத்து நெறிபடுத்தல், காலத்தின் அருமை கருதி செயல்படல் என்பன போன்ற அரிய நல்ல பழக்கங்களை நான் மேற்கொள்ள முடிந்தது.

அய்யா அவர்களுக்கு நான் செலுத்தும் அஞ்சலியாக,

*அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்*
*இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே.*

என்ற தாயுமானவர் பாடலுக்கேற்ப அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிக் கொண்டேன். என்னை ஆளாக்கிய என் தாய்த் திருநாட்டிற்கும் என்னை சேவை செய்யப் பணித்த அய்யா அவர்களுக்கும், சேவை செய்வதில் எனக்கு இன்பத்தை அளித்த பல்கலைக் கழகத்திற்கும்,

*தன் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணி செய்து கிடப்பதே*

என்ற திருநாவுக்கரசர் பாடலுக்கேற்ப என் பணியைத் தொடர்ந்து செய்யவே விழைகின்றேன்.

அய்யா அவர்களின் பெயரைத் தாங்கும் இப்புண்ணிய பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்கள் தங்களின் அனுபவங்களைக் கட்டுரையாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அய்யா அவர்கள் இம்மண்—ணுலகை விடுத்து விண்ணுலகை அடைந்த நாளில் ஆசிரியர்கள் தங்கள் கருத்துக்களைக் கவிதையாக்கித் தந்துள்ளார்கள். அவையாவும் **'பண்பின் சிகரம்'** என்ற தலைப்பில் இந்நூலாக வெளிவருகிறது. கட்டுரைகளை அளித்த அனைத்து ஆசிரியைகளுக்கும் என் நன்றி.

இந்நூல் நல்ல முறையில் வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளில் உதவி செய்த பதிவாளர் டாக்டர். சரோஜா பிரபாகரனுக்கும், கருத்துடன் அச்சிட்டு அளித்திருக்கும் திரு. அய்யம்பெருமாளுக்கும் என் நன்றி.

இந்நூலை, அருட்செல்வர் டாக்டர். மகாலிங்கம் அவர்கள் வெளியிடுவது கிடைப்பதற்கரிய பாக்கியமாகும். அவர்கள் அய்யா அவர்கள் மேல் கொண்டிருந்த அன்பால்

எங்களைப் பேணி வருகிறார்கள். அவர்களுக்கும் என் நன்றி.

ஆண்டவன் அருளால் வெளிவரும் இந்நூல் அய்யா அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள விழையும் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என நம்புகிறேன். சாரதாலயக் குழந்தைகளும், மற்றவர்களும் படித்துப் பயன்பெறுவார்களாக. ☆

நாள்
5.5.2000

(இராசம்மாள் பா. தேவதாஸ்)
வேந்தர்
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

# TRIBUTE TO REV. AYYA AVARGAL

**Dr. M. Chandramani**

It is a matter of great honour to write a few lines on Rev. Ayya Avargal who sacrificed all his pleasures for the sake of the society. A man of great ideals and vision served the society through his efforts pnipointed to educating the youth through such education which help them to stand on their own feet. Hardly we find such dynamic leaders like Ayya Avargal.

He was a great man who believed and followed the ideals of Mahatmaji, Sri Ramakrishna Paramahamsa and Swami Vivekananda. He never lived for himself; his life was for others. He served the poor because he saw God in them. He served the youth because he beloved the future of India will be safe in their hands. Ayya motivated the children and youth through his encouraging words of love and concern. He gave special attention to girl's education, since he thought women are capable of playing a great role in the welfare of our country. His emphasis was on Home Science Education as he was of the opinion that Home Science will help our children develop better quality life.

Ayya's was a life of dedication; he practised all the values we talk of in his life. He gave great importance to prayers and he believed that it is God's blessings that helped him do all that he had done.

He was a great teacher. He exhorted to the teachers that they must continue to learn, must be devoted and committed, and welfare of the children in their custody must be their priority.

Ayya's love for Tamil is well known and his contribution towards Tamil and Tamil Culture are boundless.

Ayya's simplicity in life is for everyone to emulate. The room where he lived, the dress he wore, the food he ate all are examples of his simplicity; at the same time he was a man of high thinking.

Ayya was a perfectionist. He expected perfection from everyone; be it children, teachers or administrators. He was firm with his dealings. Perfect planning and execution of work was expected from everyone. May it be a song during prayer,or a new proposal for any programme, let it be planning & construction of a building, he looks into the minutest details and wanted perfect action from the concerned.

Ayya like Jesus Christ, Prophet Mohammad, Sri Buddha spread the messages of peace, love, truth, non-violence, compassion, tolerance, strength of character and forgiveness and everything that goes with the word "Dharma".

All irrespective of their religion, community or caste were equal in front of Ayya. There was no difference between rich and poor for Ayya.

Ayya was a very positive man who believed that India is a great country with tremendous potentials. He wanted each individual to work for its progress with confidence and commitment. He wanted our children to have great moral standards which he believed would bring India to heights. He emphasised scientific approach in everything we propose to do.

He was all for encouraging an education system which would make our children "think". He wanted to completely do away with the stereotyped ways of educating our children using age old notes.

Ayya was a strong, fearless brave man who believed that great work requires great and persistent efforts. Troubles may come to hinder the task,, however if we take them as challenges and face them, we are sure to succeed.

The watchword of well being is 'Thou' not 'I'. Not a bit of this feeling of 'I' was in Ayya Avargal.

Ayya possessed tremendous integrity and sincerity and that might have been behind the success of Ayya Avargal.'s life. He had the vision and purpose of life and let Ayya Avargal's life be a continuous inspiration for our youth.

# பண்பின் சிகரம் அய்யா அவர்கள்

முனைவர். சரோஜா பிரபாகரன்

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே — நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்றே*

என்னும் ஔவையார் பாடலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்து தம் வாழ்நாள் முழுவதும் தனக்கென வாழாது, பிறர்க்கென வாழ்ந்து, இன்று தெய்வமாய் வீற்றிருக்கும் அய்யா அவர்கள் அவினாசிலிங்கம் கல்வி அறக்—கட்டளையை நிறுவி, மகளிர் கல்விக்காக கல்விக் கோயிலை உருவாக்கி அது ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடியது கண்டு உளம் பூரித்தார்கள்.

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம் பார் போற்றும் வண்ணம் விரிந்து பரந்து 'தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை' என்று மகளிர் பெருமையுடன் திகழ வழிகோலியவர்கள் அய்யா அவர்கள். பெண்கல்வி நிறுவனமாம் இக்கல்விக் கோவிலுக்குள் 1965ஆம் ஆண்டு நான் அடியெடுத்து வைத்தேன். பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே தங்கியிருந்து பணிபுரிந்ததால் அய்யா அவர்களை அனுதினமும் சந்திக்கும் பேறு கிடைத்தது.

அன்னை சாரதாமணி தேவியாரின் வடிவத்தைப் பெண் குழந்தைகளிடம் கண்ணுற்ற அவர்கள்

இவ்வளாகத்திற்குச் சாரதாலயம் என்றே பெயரிட்டார்கள். நாள்தோறும் மாலை நான்கு மணிக்கு சாரதாலய வளாகத்திற்குள் அய்யா அவர்களின் கார் வரும். கடிகாரம் வேண்டுமானால் சரியான நேரத்தைக் காட்டத் தவறலாம். ஆனால் அய்யா அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வருவதென்பது தவறவே தவறாது. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட செயலைச் செய்து முடிக்கும் அவர்கள் பணிபுரியும் எங்களையும், மாணவியரையும் காலத்தின் அருமையை உணர்ந்து செயல்பட ஊக்குவிப்பார்கள். அனைவருக்கும் அவர்களைக் காணுவதில் பெரும் மகிழ்ச்சி. அவர்களின் ஆசி பெறுவதை யாம் பெற்ற பெறும்பேறாக நாங்கள் கருதுவோம்.

மாலை நான்கு மணிக்கு அவினாசிலிங்கம் ஆரம்பப்பள்ளிக் குழந்தைகள் ஓடோடி வந்து அய்யா அவர்களின் ஆசியை அபரிமிதமாகப் பெறுவார்கள். காரிலிருந்து இறங்கியவுடன் சாரதாலய வளாகத்தின் நடுவில் இருக்கும் கோவிலின் நேராக நின்று அங்கு அமைக்கப்பட்டிருக்கும் இராமகிருஷ்ண பரமஹம்சரை வணங்கிவிட்டு அறைக்குச் செல்வார்கள். தூரத்தி– லிருந்தவாறே நாள்தோறும் இச்செயலைக் கண்டு கொண்டிருந்த நான் அய்யா அவர்களுக்குத் தான் எவ்வளவு ஆழ்ந்த பக்தி! இராமகிருஷ்ணரிடம் எவ்வளவு ஈடுபாடு! என்பதை அறிந்து என்னுடைய வாழ்க்கையிலும் அச்செயலைக் கடைப்பிடிக்க உறுதி எடுத்துக் கொண்டேன்

எப்பொழுதும் செயலாற்றிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று கூறுவார்கள் நம் அய்யா அவர்கள்.

*'அருவினை என்ப உளவோ கருவியான்*
*காலம் அறிந்து செயின்'*

என்னும் குறளை நன்குணர்ந்த அய்யா அவர்கள் இருக்கையில் அமர்ந்தவுடன் அன்றாடம் செய்ய வேண்டிய பணிகளை எங்களுக்குக் கூறி, அப்பணிகளை எவ்வளவு தூரம் செய்திருக்கிறோம் என்பதையும் கேட்டறிந்து, செய்து முடித்தால் தட்டிக் கொடுத்து, காலந் தாழ்த்தினால், ஒன்றே செய். அதையும் நன்றே செய். அதையும் இன்றே செய். அதையும் இன்னே செய் என்று அறிவுரை கூறி எங்கள் பணிகளைச் செவ்வனே செய்ய ஊக்கப்படுத்தினார்கள்.

மாலை நேரச் சிற்றுண்டியை எங்கள் வளாகத்தில் தான் அய்யா அவர்கள் சாப்பிடுவார்கள். அவர்களுக்கு ஏதாவது பலகாரம் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் எண்ணுவேன். ஆனால் அவர்களோ, 'குழந்தைகள் மாலை நேரத்தில் என்ன சிற்றுண்டி சாப்பிடுகிறார்களோ அதையே நானும் சாப்பிடுகிறேன்' என்று பிடிவாதமாகக் கூறிவிடுவார்கள். எனக்கு ஒரே ஆச்சரியம். ஒரு நிறுவனத்தின் தலைவர், வானளாவ உயர்ந்து நிற்கும் கட்டிடங்களைக் கொண்ட இடத்திற்குச் சொந்தமானவர் எவ்வளவு எளிய உணவை, விடுதிக் குழந்தைகள் உண்ணும் அதே உணவை உண்ணுகிறார்களே என்று எனக்குள் நானே வினாவை எழுப்பி இத்தகைய பண்பாட்டை அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொள்வதுண்டு.

என்னை மிகவும் நெகிழ வைத்த மற்றுமொரு நிகழ்ச்சி. மாலை பிரார்த்தனைக்கு அய்யா அவர்களை அழைத்து வர விடுதி மாணவியர் தலைவிகள் செல்வர்.

அந்த இடத்தில் பலரும் அங்கும் இங்கும் நடமாடிக் கொண்டிருப்பர். ஆனால் யாருடைய கண்களிலும் கீழே கிடந்த காகிதத் துண்டுகள் தெரியவில்லை. தெரிந்திருந் தாலும் எடுக்க வேண்டுமென்ற எண்ணமும் எழவில்லை. பிரார்த்தனைக்கு வந்த அய்யா அவர்கள், கீழே குனிந்து அவற்றைப் பொறுக்கி வந்து அருகிலிருந்த குப்பைத் தொட்டியில் போட்டார்கள். இச்செயல் தனது வேலைகளைத் தானே செய்துகொண்ட மகாத்மாவை எனக்கு நினைவுபடுத்தியது. அந்த நிமிடம் முதல் எங்கு காகித குப்பைகள் கிடந்தாலும் உடனே அப்புறப்படுத்த முயற்சி செய்தேன். செய்தும் வருகிறேன்.

அய்யா அவர்கள் மிகவும் எளிமையானவர்கள். அவர்களுடைய தோற்றம் அவர்களிடம் அன்பையும், பக்தியையும் உண்டாக்கும். நம் நாடு அன்னியர் ஆட்சியில் சிக்குண்டு அல்லற்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் பிறந்து, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, பலமுறை சிறை சென்று சுதந்திரம் வாங்கித் தந்தவர். காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென எண்ணி அனைவரும் இராட்டையில் நூற்க வேண்டுமெனக் கூறி, தாமே நூற்று வழி காட்டினார் காந்தியடிகள். அவ்வழியில் வந்த அய்யா அவர்கள் தாமே இராட்டையில் நூற்றார்கள். இராட்டையில் நூற்கும் பொழுது மனம் ஒருநிலைப்படுகிறது. நம் நாட்டில் ஆயிர மாயிரம் மக்கள் வறுமைக்கோட்டிற்கும் கீழுள்ள நிலைமையை எண்ணிப் பார்த்து அவர்கள் வாழ, நூல் நூற்றல் வழி செய்கிறது. இவற்றை நன்குணர்ந்த அய்யா

அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் கதராடை அணிவதையே குறிக்கோளாகக் கொண்டார்கள். தூய வெண்ணீறு நெற்றியில் அணிந்து தூய வெண் கதராடை அணிந்து காட்சிக்கு எளியராய் கடுஞ்சொல் அல்லராய் விளங்கினார்கள்.

பெரிய பெரிய கல்வி நிறுவனங்களை நிறுவிய அய்யா அவர்கள் வாழ்ந்த இடமோ சிறிய அறை. அதுவே அவரது எளிமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அலுவலக அறை, பார்வையாளர்களைச் சந்திக்கின்ற அறை, கல்வி நிறுவனங்களின் தலைவர்களோடு கலந்தாலோசிக்கின்ற அறை எல்லாமே ஒன்று தான். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற பொழுது அய்யா அவர்களைத் 'தென்னக காந்தி' என்றே நினைக்கத் தோன்றுகிறது.

அய்யா அவர்களிடமிருந்த மற்றொரு சிறந்த பண்பு. பிறர்க்கென வாழ்ந்ததாகும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து வழி காட்டிய அவர் தனக்கு வரும் பொருட்கள் அனைத்தையும் பிறருக்குக் கொடுத்து ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கென வாழ்ந்தார்கள். பண்டிகைகள் கொண்டாடும் பொழுது பெரியவர்களைக் காண்பதும் அவர்கள் ஆசியைப் பெறுவதும் வழக்கம். அதேபோல் அய்யா அவர்களைக் காணப் பலர் பழங்களுடன் வருவார்கள். அவற்றை அங்கு இருக்கின்றவர்கள், காண வருகின்றவர்கள் அனைவருக்கும் ஏற்றத் தாழ்வின்றி கொடுத்துவிடுவார்கள். பலமுறை அய்யா அவர்களிடம் பழங்களைப் பெற்று உண்டு மகிழ்ந்திருக்கிறேன். 'மூல

பண்டாரம் வழங்குகிறார், வந்து முந்துமினோ' என்று அருட்செல்வத்தைப் பாடியதுபோல் பொருட்செல்வத்தை வாரிக் கொடுத்தவர்கள் நம் அய்யா அவர்கள்.

அய்யா அவர்களின் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பலருள் நானும் ஒருத்தி. அவர்களைக் காணும் வாய்ப்பை அதிகமாகப் பெற்றவள். அய்யா அவர்களுக்கு சிற்றுண்டி பரிமாறியுள்ளேன். நான் அவர்களிடம் செல்லும்பொழுதெல்லாம் 'சரோஜா வந்திருக்கிறாள்' என்று அம்மா அவர்கள் கூறுவார்கள். 'விடுதியை நன்கு கவனித்து வருகிறாள்' என்றும் சொல்லுவார்கள். உடனே அய்யா அவர்கள் 'ஆமம்மா ஆண்டவன் அருள், அன்னையின் அருள் அவர்களோடு இருக்கட்டும்' என்பார்கள். தொடர்ந்து அவ்வாழ்த்து இன்றும் என்னுள் இருந்து என்னை வழி நடத்தி பணி செய்ய ஊக்கப்படுத்துகிறது.

இதுபோன்றே மாலை நேரங்களில் சில சமயங்களிலும், சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா போன்ற விழாக்களிலும் அய்யா அவர்கள் சாரதாலயத்திற்கு வரும்பொழுது காலைச் சிற்றுண்டி அளிக்கும் பொறுப் பேற்றிருக்கின்றேன். அய்யா அவர்கள் சிற்றுண்டியை மிக விரும்பிச் சாப்பிடுவதோடு என்னைப் பாராட்டும் முகத்தோடு 'அன்னதாதா இருக்கும்பொழுது குறை– யில்லை' என்று கூறுவார்கள். சாப்பாடு என்னவோ அய்யா அவர்களுடையது, பாராட்டு பெறுவதோ நான். இப்படி இந்தக் காலத்தில் யார் இருக்கின்றார்கள்! எண்ணிப்

பார்த்தால் வியப்பாக இருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு செயலுக்கும் பாராட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

அய்யா அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் என்னை இவ்வாறு ஊக்குவித்து உற்சாகப்படுத்தி வந்திருக்—கிறார்கள். அவர்களுக்கு விடுதிவிழா என்றால் மிகுந்த விருப்பம். காரணமென்னவென்றால் அவ்விழாவிற்குப் பெற்றோர்கள் பலர் வருவார்கள். பெற்றோர்களைப் பார்ப்பதென்றாலே அய்யா அவர்களுக்கு அவ்வளவு உற்சாகம். மாலை நேரம் சிற்றுண்டி அளிக்கும் பொழுது 'என்னைக் கவனிக்காதீர்கள் அம்மா, பெற்றோர்களைக் கவனியுங்கள். அவர்கள் வெகு தூரத்திலிருந்து நமக்காக வந்திருக்கிறார்கள்' என்பார்கள். அதோடு நின்றுவிடாமல், பெற்றோர்கள் இருக்குமிடம் சென்று ஒவ்வொருவரிடமும் நலன் விசாரித்து அதற்கு பின்தான் அடுத்த நிகழ்ச்சிக்குச் செல்வார்கள்.

அய்யா அவர்கள் குழந்தைகளை, நல்ல பிள்ளைகள், தங்கமான பிள்ளைகள், தைரியமான பிள்ளைகள், அதிஷ்டமான பிள்ளைகள், கெட்டிக்காரப் பிள்ளைகள், ஒழுக்கமான பிள்ளைகள், சேவை செய்யும் பிள்ளைகள், சிந்திக்கும் பிள்ளைகள் என்று வாழ்த்துவார்கள். வாழ்த்தினைப் பெற்ற ஒவ்வொரு வரும் அவ்வாறே வாழ வேண்டுமென முயற்சிப்பார்கள்.

அய்யா அவர்கள் ஒரு வழிகாட்டி. நம்பிக்கை விண்மீன். பிறர் வாழ தாம் வாழ வேண்டும் என்று நினைத்த தொண்டர். ஆண்டவனிடம் எல்லையற்ற பக்தி

கொண்டவர். யாவருக்கும் இனியன பேசி இன்பம் பெறச் செய்தவர். பண்பின் சிகரம். நாட்டுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தியாகி. அனைத்திற்கும் மேலாக அனைவர் மனத்திலும் நீங்கா இடம் பெற்றவர். தனக்கென முயலா நோன்றான் பிறர்க்கென முயலுநர் உண்மையானே என்பதற்கேற்ப வாழ்ந்த அய்யா அவர்களின் வழி நடந்து அவருக்குப் பெருமை சேர்ப்பதே நாம் அவருக்குச் செலுத்தும் நன்றியும், அஞ்சலியும் ஆகும்.

❆ ❖ ✳

# AYYA WHOM I HAVE KNOWN

**Dr. P. Parvathi Easwaran**

Ayya, to me is a personification of unconditional love, laudable ideals, commitment, dedication to service, faith, optimism, courage, perseverance, endurance, discipline and humility.

From the very first day of my entering the holy 'Saradalaya' campus since over four decades, I have felt and experienced Ayya's unconditional love in whatever he said and did. His love was universal and was beyond any boundaries. He was a living example of what he conceived as love. அன்பு என்பது மகத்தான சக்தி கொண்டது. விலை மதிக்க முடியாதது. எல்லாவற்றையும் விட அன்புதான் சிறந்தது.

Our Ayya had an enchanting way of placing before the younger generation, the faculty members and students including school children his laudable ideals of patriotism, community service and women's education and development. Invariably in every meeting, Ayya used to say that our educational institutions and research centres should be so developed and well equipped that students from all countries of

the world should come and study in our country. To students and faculty members, his constant utterances were "Noble laurets are amongst you and every year we should bag the much coveted laural : `The conviction faith and optimism, which he personified motivated the listeners work towards excellence in academics and research. Service to the downtrodden was Ayya's breath. He made it clear to the students enrolled in Saradalaya that what is gained in class room learning and research findings should percolate to the benefits of the community. He was confident when the younger generation serve with committment and dedication, the goal of building great India will be a reality. He beckened the young students to contribute our spiritual treasures love and selfless service. Ayya Avl appealed to all, "work, work ( அயராத உழைப்பு) with faith and courage till your goal is reached".

Ayya stood an example Thamas Jefterson's statement, "Nothing can stop the man with the right attitude from achieving his goal". There is nothing to fear was தாரகமந்திரம் of our Ayya Avl. According to him where the mind is without fear, the head is held high. With regard to optimism, Ayya reminds me of what I read in a book, "Optimism is a cheerful frame of mind

that enables a tea kettle to sing though it is in hot water up to its nose".

Through perseverence Ayya said, "when faced with a challenge, look for a way, not a way out" . 'ஊக்கமது கைவிடேல்' and `செய்வன திருந்த செய்' were the verses repeated in Ayya's speeches. His spirit of humour and child like laughter were magnetic. He said "எல்லையற்ற பலம், நம்பிக்கை, சக்தி, அனைவரிடத்தும் அன்பு, எளிமை, விவேகம், ஆண்டவனிடமும், தேசத்திடமும் பக்தி, தியாக சிந்தை, சேவை உணர்ச்சி, சகோதரத்துவம்' இவைகளே நம் குழந்தைகளின் இலட்சியமாய் இருக்கவேண்டும்.

As John Ruskin pointed out,

> *"The highest reward for a man's toil is not what he gets for it, but what he becomes by it".*

Our Ayya proved it by becoming part of everyone in Saradalaya Campus. Let us work hard towards achieving these laudable ideals and build a glorious India.

❖ ❊ ❖

# 'அய்யா அவர்கள் என் வழிகாட்டி'

முனைவர். இர. சந்திரா

*சாரதாலயம் தந்த அய்யா தந்தது அவினாசிலிங்கம் ஆலயம்*
*உண்மை சாரதைகள் உருவாகும் ஆலயம்*
*பாரதமே தொலைத்துவிட்டுத் தேடும் நற்குணங்கள் எங்கே?*
*மனித நேயம் எங்கே?*
*வளமான வருங்காலச் சந்ததியினர் எங்கே?*
*எனும் நிலையில்.... இங்கு.....*
*சத்துணவுக் கல்வியும், சுற்றுலாவியலும்,*
*உணவியல் துறையும், உளவியலும், இயற்பியலும்,*
*உயிரியலும், தாவரவியலும், பொருளியலும்,*
*வணிகவியலும், இசைக்கல்வியும், கல்வியியலும்,*
*கணிதமும், தமிழ், ஆங்கிலம், இந்தி, பிரெஞ்சு*
*இன்ன பிற மொழி மூலம் கல்வியறிவு மட்டுமன்றி*
*உண்மையும், உழைப்பும், உயர்வும்,*
*அஹிம்சையும், வாய்மையும், வீரமும், தீரமும்*
*மதச்சார்பின்மையும், மொழிவெறியின்மையும்*
*இன்னபிற பண்புகளின் பொக்கிஷமாய்*
*வருங்காலச் சந்ததியினரை உருவாக்கும் ஆலயம்.*
*இங்கே இருபது ஆண்டுகளுக்கு மேலாக*
*எனக்கு வழிகாட்டி... நம் அன்பு அய்யா அவர்கள்*

*காட்டிய வழியின் நெறிகள்....*

*கணக்கெடுத்தால் ஒன்றா... இரண்டா...ஓராயிரம் உண்டு*

*இங்கு நான் பெற்ற அறிவுரைகள் அவரிடம்....*

*ஒவ்வொன்றாய் எழுதிட இடம் போதா... எனினும்*

*ஒன்றிரண்டு எழுதிடுவேன்.*

*'பிரார்த்தனை காலையில் திறவுகோல், மாலையில் தாழ்ப்பாள்'*

*என்றே அதன் வலிமையை மகாத்மாவின் வழி*

*என்னைச் சிந்திக்கச் செய்தவர்*

*நீங்கள் சாதாரணப் பெண்கள் இல்லை...உயர்கல்வி பெற்ற (கற்ற) பெண்கள்*

*பிறரை உயர்விக்கப் பிறந்தவர்கள் என்றே*

*என்னில் தன்னம்பிக்கை விதைகள் விதைத்திட்டவர்*

*தோல்வி கண்டு தளராத மனம் வேண்டும் — தோல்வியே*

*வெற்றியின் அடிக்கல்... என்றே*

*தோல்வியினைத் தோற்றோடச் செய்யும் வீரமும் எனக்குத் தந்தவர்*

*ஏட்டுக் கல்வி பயனில்லை என்றே உயர் வாழ்க்கைக் கல்வியின் அருமையினை எனக்கு உணர்த்தியவர்*

*கற்ற கல்வி சமுதாய மக்களுக்குச் செல்ல —*

*'அறிவியலின் பயன் கிராம முன்னேற்றமே' என்று*

*என் ஆராய்ச்சியினைக் கிராம அடிப்படையில் அமைக்கப் பணித்தவர்*

அன்னை சாரதாமணியின் அன்பும்
இராம கிருஷ்ணரின் கடவுள் பக்தியும்
விவேகானந்தரின் விவேகமும் வியந்து பாராட்டி
அவர்கள் வழி என்னை நடக்கச் செய்தவர்
அன்பாய் இருக்க அன்பாய் இருந்து வழிகாட்டினார் –
ஏழைக்கு ஆதரவு தர
எளிமையை என்னில் உருவாக்கியவர் –
பிறர் பிழைகளை
மன்னித்து பொறுமையைக் கடைப்பிடிக்கச் செய்தவர்
தவறு கண்ட காலத்து கோபம் காட்டி
திருத்திடப் பணித்தவர்.
அன்றாடச் செய்திகளைச் சொல்லி
உலகஉயர்வு நம் உயர்வுக்கு வழிவகுக்கும் என்றவர்,
நாடு உனக்கு என்ன செய்தது என்பதை விடுத்து
நீ நாட்டிற்கு என்ன செய்தாய் என்பதற்கு
இலக்கியமாய் வாழ்ந்து நாட்டுப்பற்றினை நல்கியவர்
காலம் பாராது உழைத்து உயர்வடைந்த வாழ்க்கையை
உதாரணமாய்க் காட்டி அயராது உழைக்க
என்னில் உயர் எண்ணம் தந்தவர்.
இதுபோதும் என்றே எண்ணாமல் மேன்மேலும்
உயர்ந்திடவே
தீராத தாகம் வேண்டும் என்றே என்னை ஊக்குவித்தவர்
இன்றைய சந்ததியினர் உருவாகும் இங்கே

*அன்னாரது வாழ்க்கையே ஒரு பல்கலைக்கழகம்*

*இங்கே அவர் உருவாக்கியது நிகர் பல்கலைக்கழகம்*

*இங்கே என்னையும் அவர் ஆசிரியராய் உருவாக்கினார்*

*அவர் பிறந்த இந்நன்னாளில் அவர்தாள் பணிந்து*

*அவர் வழிகாட்டிய பாதையில் வழிநடப்பேன்*

*வாழ்க அவர் வரைந்திட்ட (வளர்த்திட்ட)*

*இப்பல்கலைக்கழகம்*

*வளர்க அவர் உருவாக்கிய உயர்கல்விப் பணி!*

★ ✳ ★

20

# அதிசய அய்யா நம்முடன் இருந்தால்...

முனைவர். என். ஜெயா

*அன்பின் எல்லை ஆற்றல் என்பார்*

*ஆண்டவன் அருள்கொள்ளை என்பார்*

*இன்முகம் இன்பத்தின் மலர்ச்சி என்பார்*

*ஈதல் நல்ல மனத்தின் பண்பென்பார்*

*உலகளாவிய அறிவு உயர்வு என்பார்*

*ஊக்கம் நல்லவற்றுள் பெரிதென்பார்*

*எண்ணங்களே வாழ்க்கையின் வலிமை என்பார்*

*ஏற்றமிகு வாழ்க்கைக்கு பிரார்த்தனை என்பார்*

*ஐம்புலத்திறன் அடைய வேண்டும் என்பார்*

*ஒருமித்த சிந்தனை ஒழுக்கம் என்பார்*

*ஓட்டமே வாழ்வில் நாட்டம் என்பார்*

*ஔவை சொல் பெருமந்திரம் என்பார்*

*அஃதே வாழ்ந்து பொலிக என்பார்*

*பெருமையுடன் எண்ணி எண்ணி*

*என்னுள்ளம் தொழுவதை*

*பேரின்பம் மகிழும் அய்யா திருவுளம் அறியாதோ!*

* ✡ *

# அய்யா அவர்களின் அருங்குணங்கள்

முனைவர். சத்தியவதிமுத்து

அய்யா அவர்களை நினைக்கும் பொழுது 'நாம் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்', காந்திய ஆன்மீகவாதியான அய்யா திரு. தி.சு. அவினாசிலிங்கனார் நிறுவிய நிறுவனத்தில் படிப்பதற்கும், பணி புரிவதற்கும் நாம் என்ன பேறு பெற்றுள்ளோம்' என்னும் எண்ண அலைகள் என் மனதில் ஓடுகின்றன. . அய்யா அவர்கள் பண்பின் உறைவிடம். நற்பண்புகளின் மொத்த உருவம். என் மனதில் பதிந்த அய்யா அவர்களின் பண்புகளைத் தொகுத்து அமைத்துள்ளேன்.

## எளிமை

1962ஆம்ஆண்டு முதலாம்இளங்கலைபட்டவகுப்பில் சேர்ந்த அன்று முதன்முதலில் நான் அய்யா அவர்களைக் காணும் பேறு பெற்றேன். கல்வி மந்திரியாக இருந்தவர். பெரிய கல்விக் கூடத்தின் நிறுவனர், காந்தியடிகளின் சீடர், இராமகிருஷ்ணரிடம் ஈடுபாடு கொண்டவர் எப்படி இருப்பாரோஎன்றஆவலில்மனம்ஒருநிலையில்இல்லாமல் தவித்தது. அய்யா அவர்கள் எளிய தூய கதராடை உடுத்தி கம்பீரமாக, புன்னகையுடன் அரங்கத்திற்குள் நுழைந்த காட்சி இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது. பணம், பட்டாடை, சொத்து, சுகம் என்று உலக மாயைகளில் மானிடர்கள் இருக்கும் வேளையில், சொத்து வேண்டாம், சுகம் வேண்டாம் எளிய ஆன்மீக வாழ்வு போதும் என்று சொன்னவர் அய்யா அவர்களைத்தவிர வேறு யாருமில்லை.

## பணிவான உபசரிப்பு

நம்மைப் போன்ற மிகச் சிறியவர்களும் அய்யா அவர்களைக் காண்பதற்குச் சென்றால், அன்பாக அமர வைத்து உபசரிப்பார்கள். தான் உண்ணும் எந்தப் பொருளாக இருந்தாலும் அதைப் பகிர்ந்தளித்து 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள். வித்யாலயத்திற்கு நம் சாரதாலய நிறுவனத்திலிருந்து சென்றால் 'அப்பா Home Science College ல் இருந்து வந்திருக்கிறாங்க—லட்டு வைத்து ஜோராக சாப்பாடு போடுங்க' என்று மனமார உபசரிப்பதில் அய்யாவுக்கு நிகர் அய்யா அவர்கள் தான்.

## பெண்களின் முன்னேற்றம்

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற செய்தி ஒலித்திடும் நம்நாட்டில் மாதருக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியவர்கள் நம் அருளாளர் அய்யா அவர்கள். கொங்கு நாட்டுத் தங்கமாக நம் அன்பு அய்யா அவர்கள், தம் பங்கிற்குக் கிடைத்த அரிய நகைகளை, பெண்களின் கல்விக்காக செலவழித்தவர்கள். இன்று எண்ணற்ற பெண்கள் தமிழ்நாட்டில் கல்வியறிவு பெற்றுள்ளார்கள் என்றால் அதற்கு அய்யா அவர்களின் அரும் சாதனையால் உருவான சாரதாலயம் தான் காரணமாகும்.

*'அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*அன்ன யாவினும் புண்ணியம் கோடி*
*ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'*

ஒருவருக்கு அளிக்கப்படும் கல்விக்கே இவ்வளவு புண்ணியம் என்றால் கோடானு கோடி மக்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் வரும் புண்ணியத்தை எண்ணிப் பாருங்களேன். தமக்கென்று சொத்துக்களைச் சேர்த்து வைக்க ஆசைப்படாதவர் அய்யா அவர்கள். ஏழு பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும் புண்ணியத்தைச் சேர்த்தவர்கள்.

## ஆண்மை / ஆற்றல்

அய்யா அவர்கள் வீரம் நிறைந்தவர்கள். அவரது சொற்கள் ஆண்மையுடனும், கம்பீரத்துடனும் இருக்கும்.

*அஞ்சுவது யாதொன்றும் இல்லை*
*அஞ்ச வருவதும் இல்லை.*

*நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*

என்ற திருநாவுக்கரசர் கூற்றுகளுக்கிணங்க தைரியத்துடன் செயல்பட்டவர்கள். ஒரு மாணவனுடனும், ஒன்றேகால் ரூபாயுடனும் ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பிக்கக்கூடிய துணிச்சல் நம் அய்யா அவர்களுக்கே வரும். ஒரு நிறுவனத்தை உருவாக்குவது, அதைப் பேணிக்காப்பது, உலகெலாம் அந்நிறுவனத்தின் பெருமையை அறியச் செய்வது என்பன சாதாரணமான காரியங்களல்ல. இருபெரும் நிறுவனங்கள் – வித்யாலயம், சாரதாலயம் என்ற கல்விக்கூடங்கள் உலக அளவில் பெரிய பெயர் பெற்றுள்ளது என்றால் அதற்குக் காரணமான அய்யா அவர்களின் ஆற்றலை என்னவென்று கூறுவது.

## இறைவழிபாடு

'ஆண்டவன் அருள்' என்பது அய்யா அவர்களின் தாரக மந்திரம்.

*தன் கடன் அடியேனையும் தாங்குதல்:*
*என் கடன் பணி செய்து கிடப்பதே'*

என்ற திருநாவுக்கரசர் கூற்றிற்கிணங்க ஆண்டவனிடம் சகலத்தையும் அர்ப்பணம் செய்தவர்கள்.

*'இன்பம் தமக்கு என எதையும் வேண்டார்*
*யாவரும் சுகப்படச் சேவைகள் பூண்டார்*
*தாயாம் எனவே தம்சுகம் எதையும்*
*தள்ளி வைத்து அருகினில் தாம் இருந்துதவும்*
*அவரே கடவுளை அறிந்தவராவர்*
*அனைவரும் மதித்திடத் தகுந்தவராவர்'.*

என்ற நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் பாடலுக்கேற்ப வாழ்ந்தவர் நம் அய்யா அவர்கள். இன்று நம் கல்வி நிறுவனங்களின் கட்டிடங்களில் எழுதப்பட்டுள்ள வாசகங்களைப் படித்தாலே அய்யா அவர்கள் இறை–வழிபாட்டிற்கு எத்துணை முக்கியம் கொடுத்துள்ளார் என்பது தெரியவரும். இன்று தேவார திருவாசக வழிபாடுகளில் எனக்கு இருக்கும் ஈடுபாட்டிற்கு அய்யா அவர்களே வழிகாட்டி.

*பெருகலாம் தவம் பேதமை தீரலாம்*
*திருகலாகிய சிந்தை திருந்தலாம்*
*பருகலாம் பரம் ஆயதோர் ஆனந்தம்*
*மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே*

*– திருநாவுக்கரசர்*

*ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி*
*தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி*
*நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி*
*மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி*
*சீரார் பெருந்துறை நம் தேவன்அடி போற்றி*

*— மாணிக்கவாசகர்*

*பித்தாபிறை சூடி பெருமானே அருளாளா*
*எத்தான் மறவாதே நினைக்கின்றேன் — மனத்துன்னை*
*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணாய் நல்லூரருட்துறையுள்*
*அத்தா உனக்காளாயினி அல்லேன் எனலாமே.*

*— சுந்தரர்*

*தோடுடைய செவியன்விடையேறி ஓர்தூவெண் மதிசூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளங்கவர் கள்வன்*
*ஏடுடைய மலரான்முனைநாட்பணிந்து ஏத்த அருள் செய்த*
*பீடுடைய பிரமாபுர மேவிய எம்மான் இவனன்றே*

*— திருஞானசம்பந்தர்*

என்றின்னவாறெல்லாம் சிவச்செல்வர்கள் அருளிய பாடல்களைத் தினமும் காலையிலும், மாலையிலும் பிரார்த்தனைக் கூடத்தில் பாடுவதன் மூலம் நமக்கு மனச்சாந்தி கிட்டுகின்றது.

## நாட்டுப்பற்று

நாம் ஒவ்வொருவரும் இந்தியக் குடிமகன் என்பதில் பெருமைப்படவேண்டும், பெருமிதம் கொள்ளவேண்டும். எண்ணற்ற தியாகச் செம்மல்கள், சீலர்கள் செய்த

அரும்பெரும் தியாகங்களினால் கிடைத்ததுதான் நம் நாட்டுக்குச் சுதந்திரம். சுதந்திர வேள்வியில் தலைமைப் பொறுப்பேற்று நடத்திச் சென்ற அண்ணல் காந்தியடிகள் தலைமையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு பல தியாகங்கள் செய்து பலமுறை சிறைக்குச் சென்றவர்கள் அய்யா அவர்கள். நான் முதலாம் இளங்கலை ஆண்டில் விடுதி மாணவியாய் இருந்த காலம் தொட்டு அய்யா அவர்கள் விண்ணுலகம் செல்லும் வரை சுதந்திரப் போராட்டங்களில் அவர்கள் உழைத்தமை பற்றி அய்யா அவர்களே கூறக் கேட்டிருக்கின்றேன்.

அய்யா அவர்கள், ''*எத்தனை ஜென்மங்கள் வந்து பிறந்தாலும் இந்திய மண்ணிடை வேண்டுவனே*'' என்ற பாடலை மிகவும் இரசித்துக் கேட்பார்கள்.

> *'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்செல்வம்*
> *யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'*

என்ற வாக்கிற்கிணங்க பல்கலைக்கழகத்தில் வேலை செய்யும் ஆசிரியைகள் வெளிநாடு செல்லும்பொழுது அவர்களுக்கு அறிவுரை கூறுவார்கள். அங்கு பின்பற்றும் முறைகள், கல்வியின் தரம், புதிய உத்திகள் ஆகியவற்றை நன்கு கவனித்து அதை நம்நாட்டில் கல்வித்துறையின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்று வாழ்த்தி அனுப்புவார்கள்.

## சிறியன சிந்தியாதான்

அய்யா அவர்கள் எண்ணும் காரியங்களெல்லாம் மிகப் பெரியன :

> *'ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்*
> *கருதி இடத்தாற் செயின்'*

என்றகுறளின்இலக்கணமாகத்திகழ்ந்தவர்அய்யா அவர்கள். மாபெரும் நிறுவனங்களான சாரதாலயம், வித்யாலயம் என்ற இரண்டையும் நிறுவி தனது கனவை நனவாக்கியவர்கள். அவினாசிலிங்கம்மனையியல்கல்லூரி 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி' அவினாசிலிங்கம் பல்கலைக் கழகமாக ஆகும் அளவுக்குச் சாதனை படைத்தவர்கள் அன்புத் தெய்வம் அய்யா அவர்கள்.

## தீர்க்கமான அறிவு

*இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன் கண்விடல்.*

என்ற குறள் அய்யா அவர்களுக்காகவே எழுதப்பட்டது என்று நினைக்கின்றேன். இந்த கல்விச்சாலை இத்துணை அளவு வளர்ந்து வந்ததற்குக் காரணம் அய்யா அவர்களின் தீர்க்கமான அறிவினால் கண்டெடுக்கப்பட்ட மாணிக்க–மாகிய அம்மா, பல்கலைக்கழக வேந்தர் முனைவர். இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்கள்தான். அய்யா அவர்கள் தம்மிடம் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருப்பார்கள். அதில் யாரிடம் எந்த வேலையை ஒப்படைக்க வேண்டும் என்பதையும் அதைப்பற்றிய விவரங்களையும் குறித்து வைத்திருப்பார்கள்.

*'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

என்ற குறள்படி எல்லோருடைய கருத்துக்களையும் செவிமடுத்துக் கேட்பார்கள்.

இவ்வாறு அய்யா அவர்களின் நற்பண்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

## அய்யா அவர்களைப் பற்றிய புதிய ஆத்திச்சூடி

அறம் வளர்த்த நாயகன்
ஆசையற்ற துறவி
இறையன்புச் செல்வர்
ஈகையின் கடல்
உவகையின் இருப்பிடம்
ஊரார் நலம் பேணிய உத்தமர்
எண்ணங்களின் ஏற்றம்
ஏழைகளின் வாழ்வை சிறக்க வைத்த செம்மல்
ஐயம் தீர்க்க வந்த அன்பர்
ஒற்றுமையின் வித்தகர்
ஓங்கு புகழ் நிலைத்த உத்தமர்
ஔவைச் சொல்லின் செல்வர்
அஃதே அவரது வாழ்வாம்.

❑ ✱ ❒

# எந்தன் நோக்கில் அவினாசிலிங்கம் அய்யா அவர்கள்

முனைவர். ஹேமலதா நடேசன்

'அன்பில் சிறந்தவர் எங்கள் அய்யா
ஆற்றல் மிகுந்தவர் எங்கள் அய்யா
இன்னிசை கேட்டு மகிழ்ந்திடுவார் — அவர்
ஈடில்லா கல்விக்கூடம் அமைத்திட்டார்
உழைப்பவர்க்கே என்றும் வெற்றி உண்டு என்று
ஊரில் உள்ளோர்க் கெல்லாம் புரிய வைத்தார்.
எண்ணிய எண்ணங்கள் எப்போதும் மிக
ஏற்றம் உடையதாய் வேண்டும் என்றார்
'அய்யா' என்று அழைக்கப்பட்ட
ஒப்பில்லா மாணிக்கம் எங்கள் அய்யா
ஓடியாடி எங்கும் தேடினாலும்
அய்யாவிற்கு இணைஅய்யா தான் — எங்கள்
அய்யாவிற்கு இணை அய்யா தான்''.

*('செந்தமிழ் நாடெனினும் போதினிலே' — என்ற பாடலின் ராகத்தில், திஸ்ர நடையில் பாடலாம்).*

'அய்யா' என்று அன்போடும், மரியாதையோடும் எல்லோராலும் அழைக்கப்படும் திரு. அவினாசிலிங்கம் அவர்களை முதன் முதலில் நான் நன்றாகப் பார்த்தது மறக்க முடியாத ஒரு அனுபவம். நான் 1974 ஆம் ஆண்டு, ஜூன்

மாதம் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் ஆசிரியையாக பணியேற்றேன். மாலை, சுமார் 4 மணியிருக்கும். சிறு குழந்தைகள் பட்டாம்பூச்சிகளைப் போல் பறந்து வந்து கல்லூரி வாசலில், காரில் வந்து இறங்கிய பெரியவரை, மிட்டாயை ஈ மொய்ப்பது போல்' மொய்த்துக் கொண்டு, கைகளைக் குவித்து ''வணக்கம் அய்யா'' என்று இராகத்தோடு கூறி வரவேற்றனர். அகமும், முகமும் மலர குழந்தைகள் ஒவ்வொருவரின் கன்னத்தையும் வருடி, ''நல்லாயிருக்கியாப்பா ' என்று புன்னகையோடும், அன்போடும் வினவிய அந்த எளிய உருவத்தை எப்படி மறக்க முடியும்? ஒவ்வொரு நாளும் மாலையில் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளை அவர் கொஞ்சி மகிழ்வதை, தூரத்தில் நின்று கண்டு மகிழ்வது என் இனிய வழக்கமாயிற்று.

அன்று அய்யா அவர்களின் பிறந்த நாள். மாலை தேனீர் விருந்திற்குக் கல்லூரி முதல்வர் 'அம்மா' அவர்களுடன், அய்யா வந்தார்கள். அப்போது, கல்லூரியில் பல வருடங்களாகப் பணிபுரிந்து வரும் ஆசிரியைகள், 'அய்யா' அவர்களிடம் சென்று அன்போடு பிறந்த நாள் வாழ்த்துக் கூறி, அவரது ஆசி பெற்று வருவதை ஓர் ஓரமாக நின்று, சற்றே பொறாமையுடனும், ஏக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தேன். 'என்னை அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. எப்படிப் போய்ப் பேசுவது? என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். அப்பொழுது 'அம்மா' என்று நாங்கள் அழைக்கும், கல்லூரியின் அன்றைய முதல்வர், முனைவர். இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்கள் என்னை அழைத்து அய்யா அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள்.

ADU LIB
150166



பல்கலைக்கழக மானியக்குழுவின் உதவி பெற்று, முனைவர் பட்டம் பெற நான் ஆராய்ச்சி செய்வதுடன், முழுநேரம் கல்லூரியில் பணியாற்றுவதையும் பெருமையாகக் கூறினார்கள். அதைக் கேட்ட அய்யா மிகுந்த மகிழ்ச்சியுடன் என்னை வாழ்த்தினார்கள்.

*''செவிக்குண வில்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப் படும்''*

என்பதற்கிணங்கத் தேனீர் விருந்து தொடங்கு முன், துணை முதல்வர், முனைவர். கோதாவரி கமலநாதன் அவர்கள் பாடத் தெரிந்தவர்களை மேடைக்கழைத்தார். வாய்ப்புக்கிடைத்தால் நழுவ விடுவேனா? எனக்கு மிகவும் பிடித்தமான 'கண்ணன் என் சேவகன்' என்ற பாரதியார் பாடலைப் பாடினேன். அய்யா அவர்கள் அதைக்கேட்டுத்தலையாட்டி இரசித்து மகிழ்ந்தார்கள்.

நான் முழுநேரமும், ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டு ஆராய்ச்சிக் கட்டுரையை 1978 ஆம் ஆண்டு முடித்தேன். கல்லூரியில் மாணவிகளைச் சேர்க்கும் குழுவின் தலைமைப் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. தேவைக்கு மேல் நிறைய நுழைவுத்தாள்கள் இருந்ததால், ஒருகுறிப்பிட்ட மதிப்பெண்ணிற்கு மேல்வாங்கியிருந்தால் மட்டுமே சேர்க்கவேண்டும் என்று வரையறை செய்து கொண்டு அதன்படி செயல்பட்டு வந்தோம். ஒருநாள், ஒருவர், தன் மகளை, கல்லூரியில் சேர்க்க வந்தார். மதிப்பெண் மிகக் குறைவாக இருந்ததால், 'சேர்த்துக் கொள்ள முடியாது' எனக் கூறினோம். அவருக்கு ஒரே கோபம்! உங்களுக்கு ''என்னை, யாரென்று

150166
...TUTE FOR HOME SCIENCE AND HIGHER E...
(DEEMED UNIVERSITY)

தெரியவில்லைபோலிருக்கிறது. நான் அய்யா அவர்களின் நெருங்கிய உறவினன். என் பெண்ணிற்குக் கல்லூரியில் சேர இடமில்லை என்று நீங்கள் எப்படிக் கூறலாம்? இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்'' என்றார்.

ஆனால் நானோ, சிறிதும் உடன்படவில்லை. என்னுடனிருந்த சக ஆசிரியைகள் என்னைத் தனியே அழைத்து, 'நமக்கேன் வம்பு; பேசாமல் அவர் பெண்ணுக்கு இடம் கொடுத்து விடலாம்' என்று அறிவுரை கூறினார்கள். ஆனால் அவர்கள் பேச்சுக்கு இணங்க என் மனச்சாட்சி இடம் தரவில்லை. ''யாராயிருந்தாலும் விதி முறைகளிலிருந்து விலகி இடம் தரமுடியாது'' என்று திட்ட வட்டமாக மறுத்து விட்டேன். வந்தவர் மிகவும் கோபமாகத் திரும்பிப் போனார். சிறிது நேரத்தில், என்னை 'அய்யா அவர்கள் அழைப்பதாக ஒரு பணியாள் வந்து அழைத்தார். என்னுடன் 'மாணவிகளைச் சேர்க்கும்' வேலையில் இருந்த மற்ற ஆசிரியைகள் முகத்தில் ஈயாடவில்லை. ''நாங்கள் அப்போதே சொன்னோம். கேட்டாயா? ஓர் இடம், அதுவும் அய்யாவின் உறவினர் பெண்ணிற்கு ஓர் இடம் கொடுப்பதால் உனக்கென்ன நஷ்டம்? இப்போது பார்? அய்யா அவர்கள் கூப்பிட்டு அனுப்பி விட்டார்கள். என்ன பதில் சொல்லப் போகிறாய்? உம்! உன் வேலை போகாமல் இருக்க வேண்டும்! என்று கவலையோடு கூறினார்கள். ஆனால் நானோ, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், நிமிர்ந்த நன்னடையோடும், நேர்கொண்ட பார்வையோடும் அய்யா அவர்களின் எதிரில் போய் நின்றேன். ''யாரப்பா நீ?'' என்றார்கள். என் பெயரைச் சொல்லி ''இந்த வருடம் கல்லூரியில் மாணவிகளைச்

சேர்க்கும் குழுவின் தலைமைப் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' என்று பணிவாகக் கூறினேன். 'ஓஹோ! நீதானா அது'' என்று கணீரென்ற குரலில் கூறினார்கள். உள்ளுக்குள் லேசான நடுக்கம் தலைதூக்கிய போதும், அதை அடக்கிக் கொண்டு புன்சிரிப்போடு நிற்க முயற்சித்தேன். ''நான் அனுப்பின பெண்ணுக்கு இடம் இல்லையென்று சொல்லிட்டாயாமே!'' என்றார்கள். நான் பதில் கூறுமுன் ''ரொம்ப சந்தோஷம்! அப்படித்தான் இருக்கணும். நானே அனுப்பினாலும், தகுதி இருந்தால்தான் கல்லூரியில் சேர்க்கணும். யார் அந்த தைரியசாலின்னு பார்க்கத்தான் உன்னைக் கூப்பிட்டு அனுப்பினேன்'' என்றார்கள். என் காதுகளை என்னாலேயே நம்ப முடியவில்லை. இச்சம்பவம், அய்யா அவர்கள் 'ஒரு மிகச்சிறந்த மனிதர்' என்பதை எனக்குப் புரிய வைத்தது.

அய்யா அவர்கள் பெண்கள் வாழ்வில் முன்னேற, ஒரு சிறந்த கல்விக்கூடம் அமைக்க விரும்பி அதன்படி ஒரு சிறிய பள்ளியை ஆரம்பித்து அதனை ஒரு பல்கலைக்கழகமாக உயர்த்தியதன் மூலம்,

*'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்''*

என்ற வள்ளுவர் வாக்கை உண்மைப்படுத்தி-விட்டார்கள்.

வயது எண்பதிற்கு மேல் ஆனாலும், சளைக்காமல், நாள் தவறாமல், மனையியல் கல்லூரிக்கு வந்து, அதன் பல்வேறு விழாக்களில் பங்கேற்று, இடி முழக்கம் செய்வது

போல் காந்தியடிகள், இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரை மேற்கோள் காட்டிப் பேசுவதில் அவருக்கு நிகர், அவர்தான். ஒவ்வொரு முறையும், தன் பேச்சின் முடிவில், மாணவிகளைப் பார்த்து,

*''நல்ல பிள்ளைகள்*
*தங்கமான பிள்ளைகள்*
*தைரியமான பிள்ளைகள்*
*அதிஷ்டமான பிள்ளைகள்*
*கெட்டிக்கார பிள்ளைகள்*
*ஒழுக்கமான பிள்ளைகள்*
*சேவை செய்யும் பிள்ளைகள்*
*சிந்திக்கும் பிள்ளைகள்''*

என அய்யா அவர்கள் கூற, மாணவிகளும் உற்சாகத்தோடு அவரோடு சேர்ந்து எழுப்பும் குரல் வானைப் பிளக்கும்.

"You become what you think you are
If you think you are strong, you become strong
If you think you are bold, you become bold".

என்ற சுவாமி விவேகானந்தரின் வாக்கை உண்மைப் படுத்தி, மாணவிகளை நல்லவர்களாகவும், தங்கமானவர் களாகவும், தைரியசாலிகளாகவும் எண்ணவைத்து, அதன் மூலம் அதே குணங்களை அவர்களிடையே வளரச் செய்த பெருமை அய்யா அவர்களையே சாரும்.

நாட்டுப்பற்று மிக்கவர் அய்யா அவர்கள். காந்தீயக் கொள்கைகளைப் பின்பற்றிய அவர், கதராடையையே

விரும்பி அணிந்தார்கள். ஆசிரியைகளும், மாணவிகளும் கதராடை அணிவதை ஊக்குவிக்க சுதந்திரதினம், குடியரசு தினம்மட்டுமின்றி கல்லூரியின் முக்கியமான விழாக்களான பட்டமளிப்பு விழா மற்றும் விளக்கேற்றும் விழா போன்ற வற்றிலும் தூய வெள்ளைக் கதர்ப் புடவையையே எல்லோரும் அணிய வேண்டும் என்று விரும்பினார்கள். அன்றைய கல்லூரி முதல்வர், இன்றைய வேந்தர், 'அம்மா' அவர்களும் அதற்கு ஒரு முன்னோடியாக அமைந்தார்கள்.

அய்யா அவர்கள் தெய்வபக்தி மிகுந்தவர்கள். பக்திப் பாடல்களை மிகுந்த ஆவலுடன் கேட்டு மகிழ்வார்கள். கல்லூரி விடுதியில் காலை 6 மணிக்கும், மாலை 6 மணிக்கும் நடக்கும் மாணவிகளின் தெய்வ வழிபாட்டு நிகழ்ச்சியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். 'தெய்வ நம்பிக்கை' மாணவிகளின் வாழ்க்கைக்கு ஒரு சிறந்த தூண் என்று மாணவிகளை உணரச் செய்த உயர்ந்த மனிதர் அய்யா அவர்கள்'.

அன்று, பல்கலைக்கழகத்தின் விடுதி தினம். மாணவி-களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 'பாஞ்சாலி சபதம்' என்ற நாட்டிய நாடகம் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. கடைசி காட்சி. பாஞ்சாலி துகிலுரிப்பு ஆரம்பிக்கக் கீழே பார்வையாளர்களிடையே அமர்ந்திருந்த அய்யா அவர்கள் தன் வயதையும் பொருட்-படுத்தாது, விரைவாகப் படியேறி மேடைக்கு வந்தார்கள். உடனே நாட்டிய நாடகத்தை நிறுத்தச் சொன்னார்கள். ''பெண்களின் பெருமைக்காகப் பாடுபடுபவன் நான்.

பெண்கள் இழிவுபடுத்தப்படுவதைப் பார்த்துக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடியாது. உடனே, இதை நிறுத்துங்கள்என்றுகோபமாகக்கூறினார்கள்.தற்காலத்தில், திரைப்படங்களில் பெண்களை மிக மிகக்கீழ்த்தரமாக குறைந்த உடையிலும் கற்பழிப்பு போன்ற காட்சிகளிலும் காட்டும்போது, அங்கு தடை (sensor) செய்வதற்கு நமது அய்யா அவர்களைப் போன்ற ஒருவருமில்லையே என்று வருத்தம் தான் எழுகிறது.

ஒவ்வொரு வருடமும் அய்யா அவர்களின் பிறந்த நாள் விழாவில் பாடுவதை நான் பெற்ற ஒரு மிகச்சிறந்த பாக்கியமாகக் கருதி மகிழ்ந்தேன்.

அய்யா அவர்களின் உடல்நிலை சற்றே நலிவுறத் தொடங்கிய நிலையில், ஒருநாள் அவரைச் சந்திக்க நேரிட்டது. அவருடன் இருந்த அன்றைய பதிவாளர் முனைவர். திரு. குழந்தைவேல், அய்யா அவர்கள் என்னை மறந்திருக்கக் கூடுமோ என நினைத்து, என் பெயரைச் சொல்லி, நான் உளவியல் துறைத் தலைவராக இருப்பதையும் சொல்ல முனைந்தபோது, அய்யா அவரைத் தடுத்து, ''எனக்குத் தெரியுமே, நீ நல்லா பாடுவியேப்பா' என்றார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் வேலை செய்யும் பல்கலைக் கழகத்தில் என்னை அதுவும் நான் பாடுவேன் என்பதை நினைவில் வைத்திருந்த அந்த அன்பான பெரியவரை என்னால் எப்படி மறக்க முடியும்?

அன்று மாலை 'அம்மா' அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் ஆசிரியைகளுக்குத் தேனீர் விருந்து! அய்யா அவர்கள் உடல்

தளர்ந்த நிலையில் இருந்தாலும், பேசும்போது அவர் குரலில் இருந்த கம்பீரம் சிறிதும் குறையவில்லை! ''பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம் என்று சாதாரணமாக வாழ்வதற்காக நீ பிறக்கவில்லை. மிகப் பெரிய சாதனை புரிவதற்காக நீ பிறந்திருக்கிறாய்'' என்று இடி இடிப்பது போல் ஆங்கிலத்தில் முழங்கினார்கள்.

"You are not born just to live and die
you are born to achieve great things in life".

அவரது இந்த வார்த்தைகள் இன்றும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. நான் எப்போதாவது சிறிது சோர்வடையும் போதும், உடல் நலம் குன்றி, மனம் தளரும் போதும், அய்யா அவர்களின் இந்த வார்த்தைகள் எனக்கு அரு மருந்தாக அமைந்து, ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்.

விவேகானந்தரின் பொன்மொழிகளான தைரியம், தன்னம்பிக்கை, செயல்திறன், வேகம், விவேகம் ஆகியவை என் மனதில் பசுமரத்தாணி போல் பதியக் காரணமானவர் அய்யா அவர்கள் என்றால் அது மிகையாகாது.

உருவத்தில் எளிமையான, ஆனால் எண்ணத்தால் உயர்ந்த அன்பு அய்யாவை, வணங்குகிறேன். அவர் உருவாக்கிய பல்கலைக்கழகத்தை உயர்த்த அரும்பாடு படுவேன் என்று உறுதி அளிக்கிறேன்.

✢ ✻ ★

# A TRIBUTE TO A GUIDING STAR AYYA AVARGAL

**Dr. Sarojini Gopalakrishnan**

*In this so journ thro' life*
*We traverse our path with strife*
*Towards the ultimate destination*
*With our way so uncertain*
*Yet we go on looking at the guiding stars*
*Yes, there are celestial stars*
*And there are divine ones*
*Some light up a distant land*
*Some fall on yonder sands*
*There are a few rare stars*
*Those are that on earth*
*God sends these precious gems*
*To light paths and give vision*
*Father we thank thee for the light*
*Thou sent to earth to give us sight*
*The light still burns*
*Illuminating countless men on earth*
*We continue dear Ayya following*
*Your footprints on the sands of time*

* * ★

# அன்புச் செல்வர் அய்யா அவர்கள்

முனைவர். சரோஜினி சுகுமார்

*தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று.*

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, புகழுடன் தோன்றி, புகழுடன் வாழ்ந்து, என்றும் தமிழ் உள்ளளவும் மக்கள் மனத்தில் புகழுடன் நிலைத்து நிற்பவர் அய்யா அவினாசிலிங்கம் அவர்கள். மிகப் பெரிய செல்வக் குடும்பத்தில் பிறப்பினும், எளிய வாழ்க்கையை மேற்கொண்டு, காந்தியடிகளின் வழியில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என எண்ணி மக்கள் சேவைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த பெருந்தகை அய்யா அவினாசிலிங்கம் அவர்கள்.

அய்யா அவர்களைப் பற்றியும், அவர் மிகத் திறம்பட நடத்தி வந்த இராமகிருஷ்ண வித்தியாலயத்தைப் பற்றியும் நான் கல்லூரி மாணவியாக இருக்கும்போதே கேள்விப் பட்டிருக்கிறேன். பிற்காலத்தில் அவர் பெயரிலேயே நடந்து வரும் அன்றைய திரு. அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில் பணி செய்யும் வாய்ப்புக் கிடைக்குமென்று நான் எண்ணியதில்லை. முதன்முதலில் கல்லூரி வளாகத்தில் நுழைந்ததும், மையப் பகுதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ண பரமஹம்சரின் கோயிலைக்

கண்டேன். அதில் நடத்தப்படும் சர்வசமயப் பிரார்த்தனை என் மனத்தை மிகவும் கவர்ந்தது. நமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் வளர்ப்பதில் அய்யா அவர்களின் ஆழ்ந்த ஈடுபாட்டை இதிலிருந்து அறியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அய்யா அவர்கள் நம் நாடு சுதந்திரம் அடைந்த பத்து ஆண்டுகளுக்குள் பெண்களுக்கென ஒரு தனிக் கல்வி நிறுவனம் அமைக்க வேண்டும், அவர்களின் முன்னேற்றத் திற்காகப் பாடுபட வேண்டும் என்ற தொலைநோக்குடன் தொடங்கிய கல்லூரி இன்று மிகப் பெரிய அளவில் வளர்ந்து, அம்மா இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்களின் அயராத உழைப்பினாலும், முயற்சியினாலும் ஒரு பெரிய பல்கலைக் கழகமாக உயர்ந்துள்ளது. அய்யா அவர்களே முதல் வேந்தராக அமைந்த சிறப்பையும் பெற்றது.

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.*

என்னும் பொய்யாமொழிப் புலவரின் வாக்கிற்கிணங்க, அய்யா அவர்களின் அனைத்துச் செல்வங்களும் ஊருணி நீரைப் போன்று மக்களுக்குப் பயன்படுவதற்காகவே செலவிடப்பட்டுள்ளது.

கல்லூரி தொடங்கிய காலத்திலிருந்தே, அய்யா அவர்கள் பல ஆசிரியைகளை மேற்படிப்பிற்கென அமெரிக்க நாட்டிற்கு அனுப்பி வைத்துள்ளார்கள். ஆசிரியைகளிடையிலும், மாணவிகளிடையிலும் பேசும்

போதெல்லாம் 'நீங்கள் அங்கு சென்று பயின்றால் மட்டும் போதாது. வெளிநாட்டவர்கள் நம் நாட்டிற்கு ஆர்வத்துடன் கல்வி பயில வருமளவிற்கு நம் நாட்டின் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும்' என்று குறிப்பிடுவார்கள். இது அய்யா அவர்களின் நாட்டுப்பற்றையும், கல்விப்பற்றையும் காட்டுகிறது.

கல்லூரியில் நான் விரிவுரையாளராகப் பணி– யாற்றிய காலத்தில் இரண்டு ஆண்டுகள் விடுதியில் தங்கும் வாய்ப்பினைப் பெற்றேன். ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் அய்யா அவர்கள் எங்களுடன் பிரார்த்தனையில் கலந்து கொள்வார்கள். பிரார்த்தனை முடிந்தவுடன் ஆசிரியைகளைச் சந்திக்கும் வழக்கத்தையும் கொண்டிருந்தார்கள். அவ்வமயம் ஒவ்வொருவரிடமும் 'நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா அம்மா, சந்தோஷமாக இருக்கிறீர்களா? என்று அன்புடன் வினவுவார்கள். பின் பிரம்பு நாற்காலியில் கோயிலை நோக்கி அமர்ந்து, கல்லூரியின் முன்னேற்றத்தைப் பற்றியும், வளர்ச்சியைக் குறித்தும் அம்மா அவர்களுடன் பேசிக் கொண்டு இருப்பார்கள். விடுதியில் வசிக்கும் நாங்கள் அப்பக்கம் போக நேரிட்டால் அய்யா அவர்கள் கட்டாயமாக ஒரு நிமிடமாவது எங்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் பேசுவார்கள். இன்றும் அய்யா அவர்கள் அமரும் அவ்விடத்தைக் கடந்து செல்லும்போது அய்யா அவர்களை நினைத்து வணங்கிச் செல்வோம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும் சர்வோதயப் பிராத்தனைகளிலும் அய்யா அவர்கள் எங்களுடன் கலந்து

கொள்வார்கள். மாணவிகள் ஆசிரியர்கள் யாவரும் பிராத்தனையின் போது தக்கிளியில் நூல் நூற்போம். அந்த நூலைக் கொண்டு சிட்டங்கள் தயாரித்து காந்திஜியின் படத்திற்கு காந்தி ஜெயந்தி அன்று மாலை சூட்டுவோம். இப்பிரார்த்தனை எங்களை மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

சாரதாலய வளாகத்தில் என்னை மிகவும் கவர்ந்த இன்னொரு நிகழ்ச்சி பள்ளிக் குழந்தைகளிடம் அய்யா அவர்கள் காட்டும் அன்பும், பரிவுமாகும். அய்யா அவர்களுடைய கார் எப்பொழுது வரும் என்று காத்திருந்து குழந்தைகள் அவர் காரைச் சுற்றிச் சூழ்ந்து கொள்வார்கள். அய்யா அவர்களுக்கு வணக்கம் சொல்லுவதில் அவர்களுக்கு பெரும் மகிழ்ச்சி. அய்யா அவர்களும் ஒவ்வொரு குழந்தைக்கும் வணக்கம் சொல்லி, பரிவுடன் அவர்கள் கன்னத்தை வருடிப் பேசுவார்கள். எல்லாக் குழந்தைகளையும் பார்த்த பின்புதான் தனது அலுவலக அறைக்குச் செல்வார்கள். நானும் எனது உடன் பணியாற்றும் ஆசிரியைகளும் தவறாமல் இந்நிகழ்ச்சி–யைக் கண்டுகளிப்போம்.

அய்யா அவர்கள் மக்களிடத்தே மிகவும் அன்பு கொண்டவர்கள். பெரியநாயக்கன்பாளையத்தில் ஒவ்வொரு வருடமும் பகவான் இராமகிருஷ்ண பரம–ஹம்சரின் பிறந்த நாளை குருபூஜை விழாவாக கொண்டாடுவார்கள். அவ்வமயம் ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்வார்கள். நாள் முழுவதும் பிரார்த்தனைக் கூட்டங்களும், சொற்பொழிவு–களும், பித்துக்குளி முருகதாஸின் பஜனையும், மிகப்

பெரிய இசைக் கலைஞர்களின் கச்சேரிகளும் மனத்தையும், கருத்தையும் கவரும் நிகழ்ச்சிகளும் நடந்து கொண்டேயிருக்கும்.

*நின்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணிசெய்து கிடப்பதே*

என்ற அப்பர் பெருமானின் வாசகத்தை மனதில் தாங்கி, 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என எண்ணி, மக்களின் சேவைக்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்த பெரியார் அய்யா அவர்கள்.

அய்யா அவர்களின் மேடைப் பேச்சு கேட்பவர்களின் மனதில் நாட்டுப்பற்றை வளர்க்கும். படிக்காத பாமரருக்கும் எளிதாக விளங்கும் வண்ணம் அமைந்திருக்கும். அதேசமயம் கல்வி அறிவு படைத்தவர்களையும் வியக்கச் செய்யும் வண்ணம் ஆழ்ந்த கருத்துச் செல்வம் பொதிந்திருக்கும்.

*எத்தனை ஜென்மங்கள் வந்து பிறந்தாலும்*
*இந்திய மண்ணிடை வேண்டுவனே*

என்ற உணர்வுடன் வாழ்ந்த அய்யா அவர்கள், மாணவர்களிடையே தேசிய உணர்வை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாட்டினைக் காட்டுவார்கள். ஒவ்வொரு சொற்பொழிவின் முடிவிலும் 'நாம் எல்லாம் மகத்தான சக்தி படைத்தவர்கள். மகத்தான சேவை செய்யப் பிறந்தவர்கள். உழைப்பிற்கும், ஆற்றலுக்கும் எல்லையே கிடையாது. ஆகவே நம் நாட்டின் முன்னேற்றத்திற்காகச்

சேவை செய்ய யாவரும் முன் வரவேண்டும் என்று மாணவர்களை ஊக்குவிப்பார்கள். விஜயதசமி அன்று மகிசாசுரனை தேவி துர்க்கை கொன்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடும் பொழுது, இவ்வசுரன் எருமைத் தலையுடையவன், எருமை சோம்பலைக் குறிக்கும். ஆகவே மனிதனிடம் குடிகொண்டிருக்கும் சோம்பலை அழிப்பதே இவ்விழாவின் நோக்கம் என்று குறிப்பிடுவார்கள்.

இவ்வாறு அன்பையே தமது செல்வமாகக் கொண்டு, கோவை மாவட்டத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக அளப்பரிய சேவை செய்த அய்யா அவர்கள், இப்புவியில் இருந்து மறைந்த போதிலும், நம் மனதில் என்றும் நிலைத்து நின்று வழிகாட்டியாக விளங்குவார்கள். அய்யா அவர்களின் தொண்டு அனைத்து மக்களுக்கும் வழிகாட்டியாய் அமையும் என்பதில் ஐயமில்லை.

☆ ❋ ☆

# MY PONDERINGS ON AYYA AVARGAL AND HIS LOYALS

**Tmt. Janet Vijaya Light**

## A GOOD EXAMPLE IS THE BEST SERMON

I am a late entry to the portals of Saradalaya. When the opportunity came to serve this unique institution solely for Women, I am moved it is founded by a selfless man, a Guru, who has set standards of living in the campus and has loyal followers. I have always longed to work for the upliftment of educated women in a male dominated Indian society. But often discouraged and dismayed from the response of fellow women, I wonder what amount of humility, kindness, and love this great person Ayya Avargal should have had to build and nurture a great institution for women.

*One loyal friend is worth ten thousand relatives* and Ayya Avargal has found Amma a loyal person to hold on his ideals and the key of his succession.

*Unless I had the spirit of prayer, I could do nothing - Charles G. Finney.* In the present world where people are valued in terms of their riches and possessions, it is heart

warming to find values of spiritualism in the campus. The day of activities start with prayers and end with prayers. Is it not a blessed place! Where did people frame such spiritual ideals? Is it not realization in the founder's life and the life of his followers!

*Men and women who got or go to the top were those who did the jobs they had in hand, with everything they had of energy and enthusiasm and hard work. - Henry S. Truman.* The sincerity, dedication, truthfulness and hard work that I observe in the followers of Ayya, who run the day to day activities of this University, has made me realize, Avinashilingam University is a place of vision for dreamers, who wish to do great things for the humanity and the womenfolk.

*The best teachers of humanity are the lives of great men - Charles H. Fowler.* Once I was very depressed by the daily hard work and walking through the campus, I sat in the auditorium to listen to what Amma was speaking to the students, after her return from US with the Honorary Doctoral degree - an added jewel to her crown. She spoke in simple words of the people who have molded her life. Her eyes filled with tears of gratitude as she spoke of her role models and how they

encouraged her to work hard saying "Nobody dies of hard work". It brought tears to my eyes and a great enlightment. Even after many days, when physical sickness hits me, I am encouraged by those words. I consider it a great opportunity to serve in this University founded with great ideals of Ayya Avargal and his loyals.

✡ ✣ ✭

# அய்யா அவர்களின் ஆள்வினையுடைமை

முனைவர். **கே. தங்கமணி**

அய்யா அவர்கள் 'விடா முயற்சி' என்ற தத்துவத்திற்கு ஒரு நல்விளக்கமாக வாழ்ந்தவர்கள். நல்ல பண்புகளை மற்றவர்களுக்குப் போதிப்பது எளிது; ஆனால் அதன்படி வாழ்வது என்பது மிகவும் கடினமே. அய்யா அவர்கள் தைரியத்தையும், விடாமுயற்சியையும், ஏழைகளுக்கு சேவை செய்வதையும், எல்லோருக்கும் அன்பு காட்டுவதையும் சாரதாலயக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்; தம் வாழ்வில் கடைப்பிடித்து நின்றார்கள்.

செய்ய முடியாத காரியம் என்று சோர்ந்து விடாமல் முயற்சி செய்ய வேண்டும். அப்படிப்பட்ட அருமையான காரியத்திற்கு முயற்சியினால் பெருமை உண்டாகும் என்ற வள்ளுவரின் தத்துவத்தை அய்யா அவர்கள் தம் வாழ்வின் நோக்கமாகக் கொண்டார்கள்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்பது அய்யா அவர்களின் அசையாத நம்பிக்கை. 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பதைச் சிறு குழந்தைகளுக்கும் புரியும் வண்ணம் சொல்லி நம்பிக்கை ஊட்டினார்கள்.

ஆரம்பித்த ஒரு காரியத்தை முடிக்காமல் அரைகுறை–யாக விட்டுவிடுகின்றவரை உலகத்தாரும் கைவிட்டு விடுவார்கள். ஆகையால் செய்யும் காரியத்தில் முயற்சி மேற்கொண்டு, அதைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்பது அய்யா அவர்களின் கண்டிப்பு. எந்தக் காரியத்தையும் அட்டவணையிட்டு, குறித்த காலத்தில்

சிறப்பாக முடிக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார்கள். அந்த உறுதியும், உழைப்பும்தான் சாரதாலயக் கல்விக் கூடத்தின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது.

தெய்வத்தால் முடியாது என்றாலும் மெய்வருத்தக் கூலிதரும் என்பார் தெய்வப்புலவர். அதுபோல, சோர்வு அடையாமல், மனம் தளராமல் முயற்சியோடு முன்னோக்கிச் செல்பவன் விதியை வென்று வெற்றியை நாடுவான் என்று அய்யா அவர்கள் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள்.

எந்தச் செயலையும் 'குருமகராஜ்' திருவடிகளுக்குச் சமர்ப்பிப்பது அய்யா அவர்களின் நற்பண்பு. நம் செயல்களை, வெற்றிகளைப் பாராட்டும்போது கூட, ''எல்லாமே குருமகராஜ் செயல்'' என்பார்கள். நம் சாரதாலயக் குழந்தைகளில் சிலராவது 'சாரதாமணி தேவி' களாக உருவாகவேண்டும் என்ற நம்பிக்கையை வளர்த்தார்கள்.

பெண்களின் கல்வி, உயர்வு, மேன்மை ஆகியவை அய்யா அவர்களின் முழுமூச்சாக அமைந்திருந்தது. அய்யா அவர்கள் கண்ட கனவு நனவாக வேண்டுமானால், நற்பண்புமிக்க பெண்மணிகளை நாம் உருவாக்க வேண்டும். நம் கல்வித்திட்டங்களும், பல்கலைக்கழக வாழ்க்கை முறைகளும், அதற்கு வழிகோல வேண்டும். இந்நிலையில் மனோபலமும், அறிவுக் கூர்மையும், ஆன்மிக வளமும் நிறைந்த பெண்கள் சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

✣ ✺ ☆

# மெய்யொளி

முனைவர். பெ. பார்வதி

பொற்கதிர் முகிலிற் பாயும்
புறஞ்சிதறும் வண்ணமணிக்குலம்
மேகம் சாய்ந்து விரிக்குமொளி
அகவொளியது ஆத்மவொளியது
ஆக்கமனமும் ஆவியுமாய்
மெய்ப்பொருள் துலக்கிட
பொய்ப்பொருள் போக்கிட
எழுந்த எம்மான் ஒளியது

✣ ✫ ✷

# அய்யா அவர்கள் எங்கள் அணையா விளக்கு

முனைவர். அ. இராஜேஸ்வரி

'சாரதாலயம் என்ற அழகான பெயரோடு பெண்கல்வி–யையே கண்ணாகக் கொண்டு இயங்கும் திரு அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்களின் தந்தை, தன்னலம் கருதாது என்றுமே பிறர் நலனுக்காக வாழ்ந்தவர். நமது அய்யா அவர்களை நினைக்கும் பொழுது கீழ்க்காணும் வரிகள் நினைவுக்கு வருகின்றன.

*பணமிருந்தார் என்பதற்காய்ப்*
*பணிந்திடாத மேன்மையும்*
*பயமுறுத்தல் என்பதற்கே*
*பயந்திடாத பாண்மையும்*
*குணமிருந்தால் யாரெனினும்*
*போற்றுகின்ற கொள்கையும்*
*குற்றமுள்ளோர் யாரெனினும்*
*இடித்துக் கூறும் தீரமும்*
*இனமிருந்தார் ஏழையென்று*
*கைவிடாத ஏற்றமும்*
*இழிகுலத்தார் என்று சொல்லி*
*இகழ்ந்திடாமல் எவரையும்*
*மணமிருந்தே இனிமை மண்டும்*
*தமிழ் மொழியால் ஓதிநீ*
*மாநிலத்தில் எவருங்கண்டு*
*மகிழுமாறு சேவை செய்*

மேற்கூறிய குணங்கள் அனைத்தும் ஒருங்கே பெற்றவர் அய்யா அவர்கள். அவரது வாழ்க்கைப் போக்கை நிர்ணயித்தவர்களுள் மிக முக்கியமானவர் வங்கம் தந்த ஞானச்செம்மல் விவேகானந்தர்,

*'ஆண்மை உருக்கொண்ட*
*அந்தணன் – எங்கள்*
*அண்ணல் விவேகானந்தனின்*
*மாண்பை அளந்திட எண்ணினால் – இந்த*
*மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்*

என்ற நாமக்கல் கவிஞரின் கருத்துக்கள் உண்மையானவை. பெண்மையை தெய்வமென்றும், பெண்மை வாழ்க என்றும் கூறி தமது உரைகளில் எல்லாம் பெண்ணிற்குத் தலைசிறந்த இடத்தைத் தந்தவர் சுவாமி விவேகானந்தர். மனைவியையே தெய்வமாகப் போற்றிய பரமஹம்சரின் சீடர். தனது சிஷ்யையான நிவேதிதாவை பாரத மேண்மைக்காக நிவேதனமாக்கியவர். அவரது கருத்துக்கள் அய்யா அவர்கள் கல்லூரியில் பயிலும் போதே கவர்ந்தன. பெண்குலத்தின் மேன்மைக்காக பெரும் முயற்சியை எடுக்கத் தூண்டின. அதன் விளைவு தான் இன்று உலகப் புகழ் பெற்று விளங்கும் அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்கள்.

திருக்குறளின் பல குறட்பாக்களுக்கு முன்மாதிரியாக விளங்கியவர் அய்யா அவர்கள். மனத்துக்கண் மாசிலனாகி, அன்புடையாரெல்லாம் பிறர்க்குரியராக விளங்கி, தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொண்டு உலகத்தோடொட்ட ஒழுகி,

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்து, பயனுடைய சொல்லையே பேசி, ஊருணி நீர்நிறைந்தற்றே யுலகவாம் பேரறிவாளன் திரு என்பதற் கேற்ப தன் செல்வத்தை எல்லாம் வாரி வழங்கி, தோன்றிற் புகழொடு தோன்றுக என்பதற்கேற்ப புகழோடு விளங்கி, உள்ளத்தாற் பொய்யா தொழுகி, பற்றுக பற்றற்றான் பற்றினை பற்றி, எப்பொருளெத் தன்மைத் தாயினுமப் பொருள் மெய்பொருள் கண்டு, முறை செய்து காப்பாற்று மன்னவன் போல் தன்கீழ் பணி செய்வாரைக் காத்து, குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொண்டு, உலகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக விளங்கியவர்.

ஒரு காரியம் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும் பொழுது அதற்குரிய இடம், காலம், கருவி இவற்றைப் பழுதில்லாமல் தெரிந்தெடுப்பது தான் அறிவுடையார் செயல். பெண்களுக்குக் கல்வி தரவேண்டும் என்று எண்ணிய அய்யா அவர்கள், அதற்குரிய இடத்தைப் பொருத்தமாக தேர்வு செய்தார்கள். காலத்தைச் செவ்வனே குறித்தார்கள்.

*'இதனை இதனால்இவன் முடிக்கும்என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்'*

என்ற குறளுக்கு ஏற்ப தமது கல்வி நிறுவனங்களுக்கு ஒரு தாயைத் தேர்ந்தெடுத்தார்கள். அம்மா அவர்களைத் தேர்ந்தெடுத்ததின் மூலம் அவர்கள் பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். பள்ளி அளவில் துவக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் இன்று பல்கலைக்—

கழகமாக மாறி இருப்பதற்குக் காரணம் அய்யா அவர்கள் தேர்ந்தெடுத்த ஆற்றல் மிகுந்த அம்மா அவர்கள்தான்.

பள்ளியில் இருந்தே இந்நிறுவனத்தில் பயின்ற எனது வளர்ச்சியில் அய்யா அவர்களின் அறிவுரைகளுக்கு மிகுந்த பங்குள்ளது. 'உன்னால் முடியும்' 'சோர்வுறாதே', எந்த முயற்சியும் தளராது உழைத்தால் பயன்தரும்' என்ற அவரது அறிவுரைகளில் வளர்ந்து கல்விஅறிவு பெற்றது எனது பாக்கியம் என்றே கருதுகின்றேன். 'தங்கமான பிள்ளைகள்' என்று அடிக்கடி கூறுவார்கள். பொன் தனது ஒளியிலேயே பிரகாசிக்கும். அதற்கு வெளியிலிருந்து ஒளி தேவையில்லை. அதைப்போன்றே தங்கமான பிள்ளை—களாகிய சாரதாலயப் பெண்கள் ஒளிபெற்றுத் திகழ வேண்டும் என்பது அய்யா அவர்களின் மாறாத ஆவல்.

விருந்து புறத்திருக்க தான் உண்ணாதவர்கள். எப்பொழுது சந்தித்தாலும் 'நன்றாக இருக்கிறாயா?' 'சாப்பிட்டாயா', என்று அன்போடு வினவுவார்கள். நாங்களும் வேற்றுமை இன்றி எங்களது சொந்த தந்தையிடம் கொள்ளும் பாசத்தோடு அவரோடு அளவளாவுவோம். எந்த முயற்சியும் அவரது வாழ்த்துக்கள் பெறாது துவக்கப்பட்டதில்லை. அவரது ஆசிபெற்ற எதுவும் வெற்றி பெறாமல் போனது இல்லை.

அய்யா அவர்கள் ஆண்டவன் மேல் கொண்ட பற்று அளவில்லாதது. எல்லாமே 'ஆண்டவன் செயல்' என்றுதான் கூறுவார்கள். அடிக்கடி அவரது பேச்சுக்களின் இடையே வரும் இவ்வார்த்தைகள் அனைவரது மனதிலும் மாறாத தெய்வ நம்பிக்கையை உருவாக்கத் தவறியது இல்லை. வாழ்வில் இடர்கள் வராமல் இருக்காது. எனக்கு

இடர்கள் வரும் போதெல்லாம், அய்யா அவர்கள் கூறி நான் அடிக்கடி கேட்ட எல்லாம் ஆண்டவன் செயல் என்ற வார்த்தைகள் எனது இடரைப் போக்கி இருக்கின்றன. ஆண்டவன் பால் மாறாத பக்தியை உருவாக்கி உள்ளன. அம்மா அவர்களும் அடிக்கடி 'பிரார்த்தனை எல்லா—வற்றையும் சாதிக்கும்' 'பிரார்த்தனையின் பலம் மகத்தானது' என்று கூறுவார்கள். சாரதாலயத்தில் படித்து சாரதாலயத்திலேயே பணிபுரியும் எனக்கு பிரார்த்தனையில் மாறாத பிடிப்பு உருவாக காரணமாக இருந்தவர்கள் அய்யா அவர்களும், அம்மா அவர்களும் தான் எனில் மிகையில்லை.

'சாதனைகளைச் சாதிப்பதற்கு அளவே இல்லை. மகத்தான காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் நீங்கள்' என்று அடிக்கடி அய்யா அவர்கள் கூறுவார்கள். நெஞ்சை நிமிர்த்தி பெருமிதத்தோடு அவரது பேச்சைக் கேட்பவர்கள் மனதில் சாதனைகள் புரியவேண்டும் என்ற ஆவல் நிச்சயம் உருவாகும். ஒவ்வொரு மாலையும் அய்யா அவர்கள் கல்லூரிக்கு வருவார்கள். அவர்களைக் கண்டவுடன் எங்களது மனது மகிழ்ச்சி அடையும். சிறு குழந்தைகள் அவரது காரைச் சூழ்ந்து கொண்டு வணக்கம் என்று கூறும்போது பாசத்தோடு அவர் திரும்பி வணக்கம் சொல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கல்லூரியில் நடக்கும் எல்லா விழாக்களிலும், தலைவராக அவர் வீற்றிருக்கும்போது அந்த விழாக்களுக்கு நிறைவு ஏற்பட்டதைப் போன்ற உணர்ச்சி தோன்றும். அவரது அறிவுரைகள் பசுமரத்தாணிபோல் நெஞ்சில் பதியும். மாணவிகளாகட்டும், ஆசிரியைகளாகட்டும்,

ஏதாவது சாதனை பெற்று பரிசோடு வந்தால் அவர் கொள்ளும் மகிழ்ச்சி கட்டுக்கடங்காது. தனது சொந்த மகளே பரிசு பெற்று வந்ததைப் போல் உவகை அடைவார்கள். ஏனென்றால் அய்யா அவர்களுக்கு எல்லாக் குழந்தைகளும் தமது குழந்தைகள்தான்.

அவரை தேசவிடுதலைக்குப் போரிட்ட சுதந்திர வீரராக பார்ப்பவர்கள் உண்டு. கல்வி நிறுவனங்களை உருவாக்கித் தந்த கல்வியாளராகப் பார்ப்பவர்கள் உண்டு. இராமகிருஷ்ண வித்யாலயத்தை உருவாக்கிய ஆத்ம ஞானியாக பார்ப்பவர்கள் உண்டு. ஆனால் சாரதாலயத்தில் இருப்பவர்களுக்கு அவரைப் பற்றி நினைக்கையில் அன்பு நிறைந்த, பண்புமிக்க, பிறர் நலனில் அக்கறை கொண்ட அய்யாவாகத் தான் பார்க்கமுடியும். அய்யா அவர்களை அரசியல்வாதி என்பதைவிட கல்வியாளர் என்பதைவிட பாசமிக்க மனிதாபிமானம் நிறைந்த நல்ல மனிதர் என்று நினைப்பதுதான் மிகவும் பொருத்தமானது. ஆயிரக்கணக்கான பெண்களின் அறிவுக்கண்களைத் திறந்து அவர்களின் எதிர்கால வாழ்க்கை ஒளிமயமாக இருக்க பாடுபட்ட அந்த அணையா ஜோதி தன் ஒளிக்கற்றைகளை நிரந்தரமாக வீசிக்கொண்டே இருக்கிறது. சாரதாலயத்தின் ஒவ்வொரு செயலிலும் அவரது ஆத்மா இரண்டறக் கலந்து செயல்பட்டு வருகிறது. அவரது ஆசி நமக்கு என்றும் இருந்து கொண்டே இருக்கிறது.

# எந்தன் நோக்கில் அவினாசிலிங்கம் அய்யா அவர்கள்

முனைவர். என். வி. புஷ்பாபாய்

அய்யா அவர்கள் சாரதாலயக் குழந்தைகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் கீழ்க்கண்டவாறு கூறுவார்கள்.

'நல்ல பிள்ளைகள்
தங்கமான பிள்ளைகள்
தைரியமான பிள்ளைகள்
அதிர்ஷ்டமான பிள்ளைகள்
ஒழுக்கமான பிள்ளைகள்
கெட்டிக்காரப் பிள்ளைகள்
சேவை செய்யும் பிள்ளைகள்
சிந்திக்கும் பிள்ளைகள்'

அய்யாவின் வாழ்க்கை அறிவு நூல்களைத் தன்னகத்தே கொண்டு திறந்து கிடக்கும் நூல் நிலையம் போன்றது. அதிலிருந்து கற்றுக் கொள்வதற்கு நமக்கு நிறைய இருக்கிறது.

☆ பலமே வாழ்வு, பலமின்மையே மரணம்,
பலமே இன்பம்

☆ இறைவனை முழு மனதுடன் அணுகுபவர்க்கு
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

☆ அணிகலன் என்பது கல்வி ஆகும்
கல்வியால் பொறாமை அகலும்
எளிதில் கிடைக்காத செல்வம் கல்விச்செல்வம்
புகழையும், பெருமையையும் தருவது கல்வி

☆ நீ உன்னில் அன்பு கூர்வது போல
பிறரிடத்தில் அன்பு கூர்வாயாக
உன்பகைவனுக்கும் நன்மை செய்

☆ எளிமை, அன்பு, சேவைமனப்பான்மை
இவை அய்யா அவர்களின் வாழ்விலிருந்து
நான் கற்றுக் கொண்டவை.

☆ அய்யா அவர்கள் நிறுவிய சாரதாலயத்தில்
யானும் பணிபுரிவதில் பெருமையடைகிறேன்.
'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற
அவரது கொள்கையை யானும்
பின்பற்றி நடப்பேன்.

✣ ☆ ✣

# அய்யனே எமது சற்குரு - ஒரு மகத்தான ஊற்று

முனைவர் வி. இராஜம்

அவினாசிலிங்கம் அய்யா அவர்கள் என்னும் பேரறிஞர், எம்மை வழி நடத்திய ஓர் ஆன்மீக இலட்சியவாதி. இவர் ஒரு சிறந்த ஆசிரியர். இவரது கல்விப்பணியால் அவினாசிலிங்கம் கல்வி நிறுவனங்கள் அகில உலக நாடுகளில் புகழ் பெற்றன. சுவாமி விவேகானந்தர், காந்திஜி, டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் வரிசையில் அய்யா அவர்கள் இடம் பெறுகிறார்கள்.

அய்யா அவர்கள் தமது பண்புகளான விடா முயற்சி, கடுமையான உழைப்பு, சேவை மனப்பான்மை போன்றவற்றைக் கேட்போர் மனதில் பதியும் வண்ணம் உரைக்கும் ஆற்றல் பெற்றவர்.

அய்யா அவர்கள் தன்னலமற்றவர், களங்கமில்லா உள்ளத்தவர், மனம், வாக்கு, காயம் இவைகளால், பரிசுத்தமாக வாழ்ந்தவர். நம்பிக்கையோடும், தீவிர வைராக்கியத்தோடும் உயர்ந்த தத்துவங்களோடும் கூடிய உன்னத மனிதர். தமது வாழ்நாள் முழுவதும் கல்விப்பணியே தமது கடமையென வாழ்ந்த மகாத்மா. அவர் எங்களது அறிவு வளர்ச்சிக்கும், ஆத்ம பலத்துக்கும்

உறுதுணையாய், இருந்து வருகிறார். இதனைத்தான் வேதங்களும்,

*'அஸதோ மா ஸத்கமய*
*தமஸோ மா ஜ்யோதிர்கமய*
*ம்ருத்யோர் மா அம்ர்தம் கமய*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

என்று கூறுகின்றன. அதன்படி எங்களை சத்திய பாதைக்கும், ஒளிமயமான பாதைக்கும், அழிவற்ற நிலையான கல்விப் பாதைக்கும் வழி நடத்தியவர் அய்யா அவர்கள்.

அய்யா அவர்கள் ஒவ்வொரு நாளும், புதுப்புது கருத்துக்களைக் கற்கவும், கேட்கவும், கூறவும் மிக ஆவலோடு இருப்பார்கள். கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்பது தான் அய்யா அவர்களின் கொள்கை. கல்விச் செல்வம் ஒன்றுதான் அள்ள அள்ள குறையாத செல்வம் என்பதில் அய்யா அவர்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அய்யா அவர்களே கல்வி என்னும் செல்வத்தை வாரி வழங்கிய வள்ளல். நமக்குள் ஒளிந்துள்ள ஆத்ம சக்தியையும் தெரிந்து கொள்ள வழி காட்டிய பெருந்தகை!

இறைவனே ஒரு சற்குரு ரூபத்தில் வருவான் என்ற சான்றோர் வாக்கினை மெய்ப்பிக்க வந்தவர் அய்யா அவர்கள். ஆசிரியர்களின் திலகமாகத் திகழ்ந்த டாக்டர் எஸ். இராதகிருஷ்ணன் கூறிய கூற்றான 'ஒரு விஞ்ஞானியின் வெற்றி கூட, அறிவு வளர்ச்சி, ஆத்மபலம்

போன்ற நற்பண்புகளைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது' என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர்கள்.

'அன்ன சத்திரம் ஆயிரம் கட்டுவதை விட, ஆண்டவனுக்காக ஆலயங்கள் பதினாறாயிரம் உருவாக்கு– வதை விட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே சிறந்த புண்ணியத்தைத் தரும் என்ற பாரதியின் வாக்கினை மெய்ப்பித்தவர் அய்யா அவர்கள்.

இவ்வளவு நற்பண்புகள் நிறைந்த அய்யா அவர்களை நாங்கள் இறைவனாக நினைத்துத் தொழுகிறோம்.

*'குருர் பிரம்மா, குருர் விஷ்ணு*
*குருர் தேவோ மஹேஸ்வரா:*
*குரு சாக்ஷத் பரபிரும்மா தஸ்மை*
*ஸ்ரீ குரு குருவே நம'*

என்று சேவித்து நிற்கிறோம். எங்களுக்கு பயனுள்ள நிறைவான வாழ்வினைத் தேடித் தந்த அய்யா அவர்களின் பாதம் தொழுது ஒவ்வொரு நாளும் வணங்கி வருகிறோம்.

✤ ☆ ✤

# என் மனதில் நிறைந்த அய்யா அவர்கள்

முனைவர். கௌரி இராமகிருஷ்ணன்

*'தூய்மையுறுக! தூய்மையுறுக!*
*வாய்மன யாக்கை தூய்மையுறுக!*
*மனத்தை அடக்குக! மாரனை வெல்க!*
*சினவெறி யொழிக! சீலம் போற்றுக!*
*எல்லா உயிர்க்கும் இனியன செய்க!*
*நல்லன நாடுக! நல்லினஞ் சேர்க!*
*அன்பே செய்ம்மின்! அறவழி நடமின்*
*இன்பமாகும் எல்லா உயிர்க்குமே!*

என்ற சுத்தானந்த பாரதியின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டிய வள்ளல் பெருந்தகை அவினாசிலிங்கம் அய்யா அவர்கள். அன்பின் திருஉருவாய், ஆற்றலின் மறுவுருவாய், இன்முகம் காட்டும் இனியராய், ஈகைக்குணம் நிறைந்தவராய், உண்மையே உருவாய், ஊர்போற்றும் உத்தமராய், எம்மை வாழ வைத்த தெய்வமாய், ஏகாந்த ரூபனாய், 'அய்யா' என்ற சிறப்பை உடையவராய், ஒவ்வொருவரது உள்ளத்திலும் குடிகொண்டிருக்கும் தெய்வமாய், ஓதும் வேதத்தின் உட்பொருளை உணர்ந்தவராய், ஔவையின் பாடல்களை இரசித்து மகிழ்ந்தவராய் விளங்கிய 'அய்யா' அவர்களால் தான் இன்று நான் இந்தப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் ஓர் அரிய வாய்ப்பைப் பெற்றேன்.

நான், என் சிறுவயதில் அய்யா அவர்களைப் பற்றித் தெரிந்து கொண்டது என் பாட்டியும், அய்யா அவர்களின்

சகோதரியுமான திருமதி. முத்தம்மாள் என்பவர் மூலமும், அய்யாவை தெய்வமாய் மதித்து வாழ்ந்தவரும், அய்யாவின் மீது எல்லையற்ற பாசமும், மதிப்பும் கொண்டிருந்தவரு—மான என் அருமைத் தந்தையார் திரு. டி.எஸ். சண்முகசுந்தரம் அவர்களாலும் தான். நம் அய்யாவைப் பற்றி, அவரது தன்னலமற்ற சேவையுள்ளம் பற்றிக் கூறும்போது என் தந்தையாரும், பாட்டியாரும் உணர்ச்சிவசப்பட்டுஅழுது கொண்டே சொல்வார்கள். அதையெல்லாம் கேட்கும்போது, நாமும் அப்படியெல்லாம் வாழவேண்டும் என்று என் மனதில் மிகுந்த ஆசை உண்டாகும். 'சொல்வது எளிது, நினைப்பதும் எளிது ஆனால் செயலில் செய்யும்போது தான் அது எவ்வளவு கடினம்' என்பது என் சிறிய மூளைக்குப் பிறகுதான் புரிந்தது. என் பள்ளிக்கூட வாழ்க்கையில் 'அய்யா' அவர்களையும், அம்மா அவர்களையும் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், நாம் இந்த கல்லூரியில் சேர்ந்து பயிலும் வாய்ப்பு என்று வருமோ என்ற ஏக்கம் இருக்கும். எல்லாம் வல்ல இறையருளாலும், அய்யா, அம்மா இருவரின் ஆசி யாலும் இங்கு பி.யு.சி. சேர்ந்தேன். பின்னர் பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. மனையியல் படித்தேன். அதன் பின்னர் வீட்டில் இருந்தேன். நாம் படித்த படிப்பை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் ஏற்படுத்தியவர் அய்யா அவர்கள் தான். அய்யா அவர்கள் அளித்த ஊக்கத்தால், உற்சாகத்தால், இடைவிடா தூண்டுதலால்தான் வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது. அந்த எண்ணம் ஈடேற என் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி உண்டாக, வழிவகுத்தவர் 'அய்யா' அவர்கள்தான். அவரது ஆசியால்

தான் கல்லூரியில் பணிபுரியும் ஓர் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதன்பின்னர் அய்யா அவர்களும், அம்மா அவர்களும் கொடுத்த உற்சாகத்தாலும், அரிய வாய்ப்புகளாலும் நான் எம்ஃபில் படிக்க முடிந்தது. அவர்களுக்கு நான் எவ்வளவுதூரம் கடமைப்பட்டுள்ளேன் என்பதை வெளிப்படுத்த தகுந்த வார்த்தைகள் எனக்குக் கிடைக்கவில்லை. அய்யா அவர்களிடமிருந்து நான் கண்டு மகிழ்ந்த, கற்றுக் கொண்ட, கடைப்பிடிக்க விரும்பியவை பல. அவையாவன :

*'அனைவரிடமும் மாறா அன்புள்ளம்*
*ஆக்கவழியில் ஆற்றலை வெளிப்படுத்தும் ஆர்வம்*
*நிறைந்த உள்ளம்*
*இன்னல்வரினும் இனிமையாய்ப் பேசும் இயல்புள்ளம்*
*ஈகைக்குணமும், ஈடில்லா பாசஉணர்வும் நிறைந்த உள்ளம்*
*உண்மையே பேசும் உன்னத உள்ளம்*
*ஊரார் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் –*
*உற்சாக உள்ளம்*
*தன்னலமற்ற, தியாக சிந்தனை உள்ளம்*
*தளராத, தன்னம்பிக்கை நிறைந்த உள்ளம்*
*மக்கள் சேவையே, மகேசன் சேவை என்ற*
*பக்குவ உள்ளம்*
*பெண் கல்விக்காக பெருமைமிகு சாரதாலயம் தனை*
*உருவாக்கிய உயர்ந்த உள்ளம்*
*இறைவன்மீது ஈடில்லா பக்தி உள்ளம்'*

✧ ☆ ✧

# நான் கண்ட அய்யா அவர்கள்

முனைவர். சியாமளா விசயவதி

மாறிவரும் இப்புவியினிலே, அன்றும், இன்றும், என்றும் மாறாது நிலைத்து நிற்கும் உயர்ந்த உள்ளம் கொண்ட பெருந்தகை திரு. அவினாசிலிங்கம் அய்யா அவர்கள். என் கல்லூரி நாட்களின் நினைவலைகளைப் பின் நோக்கி செலுத்திப் பார்த்து அய்யா அவர்களைப் பற்றிய மலரும் நினைவுகள் ஒரு சிலவற்றை இங்கே படைக்கிறேன்.

வெள்ளை நிறக் கதராடை அணிந்து ஒரு எளிய மனிதனாக கல்லூரி வளாகத்தில் நடந்து வரும் போது என் மனக் கண் முன் அப்பெரியவர் காந்தியைப் போன்றே காட்சியளிப்பார். தான் வரும் வழியில் குப்பைகள் எங்கு கிடந்தாலும் கீழே கண்ட காகிதங்களைக் குனிந்து தன் கையாலேயே எடுத்து குப்பைத் தொட்டியில் போடுவதைப் பார்த்த போது, அவர் சுற்றுப்புறச் சூழலில் கொண்ட அக்கறையை அறிந்து கொண்டேன். தன் கண் எதிரே காணும் மாணவிகளிடம், அவர்களின் குடும்ப நலனை, குறிப்பாக 'அப்பா நல்லா இருக்கிறாராப்பா' என்று வினவும் போது அவருள் ஒரு தந்தையின் பாசத்தைக் கண்டேன். மாலையில் அய்யா அவர்கள் வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பள்ளி மழலைச் செல்வங்கள். காரிலிருந்து அய்யா அவர்கள் இறங்கியதும் ஓடிச் சென்று

தங்கள் அன்பை வெளிப்படுத்துவதும் அய்யா அவர்களின் அன்பைக் குழந்தைகள் பெற்றுக்கொள்வதும் குழந்தைச் செல்வங்கள் பால் அவர் கொண்டிருந்த அன்பைக் காட்டியது.

சமுதாயத்தில் சமூகப் பணிகளைத் தொடர்ந்து செய்வதைப் பெரிதாக எண்ணிய அய்யா அவர்கள் தன் கனவுகள் நனவாக கல்லூரி மாணவிகளுக்கு பாடத்திட்டத்திலேயே சேவை புரிந்திடும் கல்வியை வழங்கினார்கள். பெண்கள் முறையாக கல்வி பயின்று ஆண்மையோடு வாழ்ந்து சமுதாயத்தை, தேசத்தை, உயர்த்திட பாடுபட்டவர் அய்யா அவர்கள். பிரார்த்தனையின் போது அய்யா அவர்கள் கொடுத்த அறிவுரைகள் அத்தனையும் மணி முத்துக்கள். இவ்வரிய கல்விக் கோவிலில், கல்விச் செல்வத்தை மட்டுமல்லாது சேவை மனப்பான்மை, அன்பு, பாசம் போன்ற பல நற்குணங்களை எமக்களித்த அய்யா அவர்களை வாழ்த்தி வணங்குகிறேன்.

✣ ✪ ✡

# நான் சந்தித்த மகான்

திருமதி. யூ. ஜெரினாபீ

'அய்யா என்ற சொல்லைச் சொல்லும் பொழுதெல்லாம் உள்ளுக்குள்ளே ஓர் உன்னதமான சிலிர்ப்பு தோன்றும். அது இன்று மட்டுமல்ல 'அய்யா என்று சொன்னவுடன் எளிமையானதொரு தோற்றம், கம்பீரமான நடை, மாறாத புன்னகை என் நினைவில் நிறைந்திருக்கும். . அவர் அறிவின் உறைவிடம், அன்பின் சிகரம், மனிதருள் மாணிக்கம், நிகரில்லா மாமேதை.

ஒருமுறை நாட்டு நலப் பணித்திட்ட முகாம் மேடூரில் நடைபெற்றது. அங்குதான் அய்யா அவர்களை நான் முதலில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அது ஒரு கார்த்திகை தீபத் திருநாள். அந்த நாள் என் வாழ்வின் பொன்னாள். அன்று மேடூரில் உள்ள கோயிலில் கார்த்திகை தீபம் ஏற்றிக் கொண்டாடினோம். அந்த விழாவில் அய்யா அவர்கள் கலந்து கொண்டார்கள். அய்யா அவர்கள் அங்கு நடந்த ஆராதனையிலும் பங்கு கொண்டார்கள். அது ஒரு மிகச் சிறப்பு வாய்ந்த விழாவாகத் திகழ்ந்தது. இன்றும், ஒவ்வொரு கார்த்திகை தீபத்தன்றும் எனக்கு அய்யா அவர்கள் பங்கு கொண்ட விழாதான் நினைவில் தோன்றும்.

அன்று அய்யா அவர்கள் எங்கள் அனைவரையும் பாராட்டினார்கள், ஆசிர்வதித்தார்கள். அவை இன்றும் என்

நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளன. 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கிணங்க இது போன்ற வாய்ப்பு யாருக்கும் கிடைக்காது. இந்த வாய்ப்பினை நீங்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு பணி ஆற்றியுள்ளீர்கள்' என்று எங்களைப் பாராட்டி–னார்கள். இப்பாராட்டும், ஆசிர்வாதமும் இன்றும் என் வாழ்வில் என்னுடைய வெற்றிப் படிகளுக்குத் தூண்டுகோலாகவும், உறுதுணையாகவும் அமைந்து உள்ளன. அய்யா அவர்களை நினைக்கும் பொழுதெல்லாம்,

*'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'.*

என்ற குறள் நினைவிற்கு வருகிறது.

சாரலாயத்தின் தீபச்சுடர் மகான் அய்யா அவர்களின் ஆசிர்வாதமும், பாராட்டும் என் வாழ்நாளில் பெற்றமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

✧ ✸ ✡

# அய்யா அவர்கள் காட்டிய வழியில்

திருமதி. பி. சாந்தி

'ஒவ்வொரு மனிதனும் தான் இப்பூமியில் வாழ்ந்ததற்கான அடையாளத்தை விட்டுச் செல்ல வேண்டுமென்பார்கள். அவ்வழியில் அய்யா அவர்கள் அன்பு, பணிவு போன்ற நல்ல குணங்களை நம்முள்ளே விதைத்துச் சென்றிருக்கிறார்கள். அவ் விதைகளே இன்று ஓர் ஆலமரமாக வளர்ந்திருக்கிறது என்று கூறலாம். ஓர் அற்புதமான மனிதரான அய்யா அவர்கள், நமக்கு நண்பராக, ஆசானாக இருந்தார்கள். கல்வியை விலையாக்கும் இக்காலத்தில் பெண்களுக்குக் கல்வி அளித்த தியாகச் செம்மல் அய்யா அவர்கள்.

நான் பள்ளிப் பருவம் முதல் கல்லூரிப் பருவம் வரை இவ்விடுதியிலே தங்கிப் படித்ததால் அய்யா அவர்களை அடிக்கடி காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன். அந்நேரங்களில் அவரைப் பற்றி நான் அறிந்தவை என்னை வியக்கச் செய்தன என்றே கூறலாம். 'உன் கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே' என்பது எவ்வளவு உண்மை என்பதை நான் அய்யா அவர்களிடம் அறிந்து கொண்டேன். அவர் தினமும் மாலை வேளை பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வரும் பொழுது பின்வருமாறு கூறுவார்கள் :

*'நல்ல பிள்ளைகள்*
*தங்கமான பிள்ளைகள்*
*தைரியமான பிள்ளைகள்*
*அதிர்ஷ்டமான பிள்ளைகள்*

*கெட்டிக்காரப் பிள்ளைகள்*
*ஒழுக்கமான பிள்ளைகள்*
*சேவை செய்யும் பிள்ளைகள்*
*சிந்திக்கும் பிள்ளைகள்'*

என்பார்கள். அவற்றை நாங்கள் திரும்பக் கூறவேண்டும்.

*'நல்ல எண்ணங்களை மனதில் பரவ விடுங்கள்*
*அவை நல்ல செயல்களாக வெளிப்படும்'*

என்பது ஆன்றோர் வாக்கு. அய்யா அவர்கள் வாயிலாக இதுபோன்ற வார்த்தைகளை நாம் கேட்கும்போதும், சொல்லும் போதும் அவை மனதில் பதிந்து சிறந்த பரிமாணங்களை நமக்குக் கொடுக்கும்.

நல்லோரின் வார்த்தைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதற்கிணங்க நானும் ஒருவகையில் அதிர்ஷ்டக்காரப் பிள்ளைதான். ஏனென்றால் அய்யா அவர்கள் அமைத்த சாரதாலயத்தில் படிப்பதற்கும், சேவை செய்வதற்கும் எனக்கு வாய்ப்புக்கிடைத்துள்ளது. சமுதாய வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் கல்வியானது எவ்வளவு அவசியம் என்பதை நன்கு உணர்ந்த காரணத்தினாலேயே, அய்யா அவர்கள் கல்விப் பணியாற்றினார்கள். பிறருக்குச் செய்யும் பொருளுதவியோ அல்லது பண உதவியோ அச்சமயத்தில் மட்டுமே பயன்தரக் கூடியது. ஆனால், அவர் ஆற்றிய கல்விப்பணி அன்னாரின் மறைவிற்குப் பிறகும் ஒளிவீசி நம்மை வழிநடத்திச் செல்கின்றது.

✡ ✲ ✧

# என் வாழ்வில் அய்யா அவர்கள்

திருமதி. இரா. பரிமளா

✲ ஓடிச் சென்று வணங்கிட்டால்
கன்னம் தடவி மகிழ்ந்திடுவார்!
காத்திருந்து வணக்கம் சொல்ல
கண்களில் கனிவு காட்டிடுவார்!

✲ கல்விச் சாலைகள் பல அமைத்து
கடவுள் பணி செய்திட்டார்!
பெண்கல்விக்கு வித்திட்டு
பெறுதற்கரிய அம்மாவை
தலைமை ஏற்கச் செய்திட்டார்!

✲ எளிமையே தன் வாழ்வு என்றிட்டார்!
உழைப்பின் உயர்வைப் போற்றியதால்
உலகில் உயர்ந்த மனிதரானார்!

✲ ஏட்டுக் கல்வியை எனக்களித்து
ஏழை என் வாழ்வை உயர்த்திட்டார்!
உலகம் போற்றும் உத்தமரே
உம்புகழ் என்றும் வளர்ந்திடுமே!

✣ ✲ ✣

# அன்பின் தெய்வம் எங்கள் அய்யா அவர்கள்

திருமதி. தி. திலகவதி

*'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்'*

என்னும் வள்ளுவரின் வாக்கினை மெய்ப்பிக்க உலகில் வாழ்ந்த உத்தமர், அன்பின் திருவுரு, அறிவுச் சுடர், ஆற்றலின் பேரொளி, இம்மையில் எமைக் காக்க வந்த கர்ம வீரர், சொல்லின் செல்வர், செயலில் ஈடு இணையற்றவர், விடுதலைப் போராட்டத் தியாகி, திருப்பூரில் பிறந்த தியாகச் செம்மல், பிறர் நலம் பேணிய அண்ணல், பொறுமையின் சிகரம் இப்படி அய்யா அவர்களின் நற்குணங்களைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். அன்பு, பாசம், கருணை, பணிவு, பக்தி என்னும் அருங்குணங்களின் உறைவிடமாய், மகாத்மா காந்தி வழிநின்று மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த தேசத் தொண்டர் அய்யா அவர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டு தூய கதராடை உடுத்து, நெற்றியில் திருநீறு தரித்து திகழ்ந்தவர்கள். இராமகிருஷ்ண பரமஹம்சர் மீது தாளாத பக்தி கொண்டவர்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு பல தடவை சிறை சென்றிருக்கிறார்கள். சிறையில் இருந்த போது அய்யா அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக

இருப்பார்களாம். காலை நான்கு மணிக்கே எழுந்து குளித்து விட்டு பூஜையை முடித்து விட்டு, நெற்றியில் விபூதியோடு காவலர்கள் ஆறு மணிக்கு வரும் பொழுது அய்யா அவர்கள் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருப்பார்–களாம். சிறையில் இருந்த காலத்தில் ஒரு சிறிதும் சோம்பி–யிராமல் எப்போதும் படித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருப்பார்களாம்.

அய்யா அவர்களின் உயர்ந்த உள்ளமும், ஏழை எளிய மக்கள் கல்வி கற்க உதவிய நல்ல எண்ணமும் கூடி உருவானது தான் இராமகிருஷ்ண வித்யாலயம் என்னும் கல்விக்கூடம்.

*'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்*
*திண்ணிய ராகப் பெறின்'*

என்னும் குறளுக்கேற்ப தியாகத்தின் திருவுருவான அய்யா அவர்களின் முயற்சியினாலும், கடின உழைப்பினாலும் ஒரேயொரு மாணவனுடன் தொடங்கப் பெற்ற வித்யாலயம் என்னும் அந்தக் குருகுலம் 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி' பள்ளி, கல்லூரிகள், பயிற்சி மையங்கள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கி உயர்ந்து, பரந்து நிற்கிறது. சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் என்னும் பேறுபெற்ற அய்யா அவர்கள் பெண் கல்வி என்பது ஏட்டளவில் இருந்த காலத்தில் அதனைச் செயல்படுத்தத் துணிந்த கர்மவீரர் என்றால் மிகையாகாது.

*'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'*

என்ற பாரதியின் புதுமைப் பெண்ணை உருவாக்க வேண்டும் என்ற மன உறுதியோடு செயல்பட்டு வெற்றி பெற்றவர்கள். பெண்கள் கல்விக்கென அய்யா அவர்கள் தோற்றுவித்தது தான் இந்தப் புனித சாரதாலயம் என்னும் இக்கல்விக் கோயில். இக்கோயிலில் அய்யா அவர்கள் தெய்வமாக நம்மிடையே இருந்து நாட்டுப் பற்றையும், நல்ல பழக்கவழக்கங்களையும், ஆன்மீக சிந்தனையையும், எளிய வாழ்க்கையையும், ஏழை எளியவர்களுக்கு சேவை செய்யும் மனப்பாங்கையும் ஊட்டி வளர்த்தார்கள்.

அய்யா அவர்கள் தமிழார்வம் மிக்கவர்கள். அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபொழுது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்கினார்கள். பாடத்திட்டங்களில் திருக்குறளைச் சேர்த்திட ஆணை பிறப்பித்தார்கள். தமிழில் கலைக்களஞ்சியம் உருவாகக் காரணமாக இருந்தார்கள். அய்யா அவர்களின் முயற்சியில் குழந்தைகள் கலைக்களஞ்சியம் உருவானது.

*'செயலைச் செய்; பலனை எதிர்பாராதே'* என்னும் கீதை வரிகளும்,

*'நின் கடன் அடியேனையும் தாங்குதல்*
*என் கடன் பணிசெய்து கிடப்பதே'*

என்னும் திருநாவுக்கரசர் வாக்கும், அய்யா அவர்களை நினைவுறுத்தும். எப்போதும் எதையேனும் சிந்தித்துக் கொண்டும், செயலாற்றிக் கொண்டும் இருந்த அய்யா அவர்களைத் தேடி விருதுகளும், பட்டங்களும் வந்தடைந்து பெருமை தேடிக் கொண்டன. கல்வித் துறையில் அய்யா அவர்கள் ஆற்றிய அரும்பணிகளுக்காக 'பத்ம பூசண்'

விருதும், நேரு இலக்கிய விருதும், ஜம்னாலால் பஜாஜ் விருதும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

எவ்வளவு வேலைகள் இருந்தாலும் காலையும், மாலையும் நடைபெறும் வழிபாட்டில் கலந்துகொண்டு குழந்தைகளுக்கு ஆசி வழங்க அய்யா அவர்கள் தவறியதே யில்லை. தினந்தோறும் தேவாரம், திருவாசகம், கம்ப–ராமாயணம் இவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கூறி, அதில் கேள்வியும் கேட்டுப் பிள்ளைகளின் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவார்கள். எந்தச் செயலையும், நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்து அதனைப் பற்றித் தெரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்கள்.

அய்யா அவர்கள் ஒரு தூய்மை விரும்பி. கல்லூரி வளாகம் தூய்மையாக இருக்க வேண்டும் என்று கண்டிப்போடு கூறுவார்கள்.

*'தூய்மையுறுக தூய்மையுறுக*
*வாய் மன யாக்கை தூய்மையுறுக'*

என்று எல்லோருக்கும் போதித்தவர்கள். தன் குழந்தைகள் அதனைச் செயல்படுத்த வேண்டும் என்று விரும்பியவர்கள். குழந்தைகளுக்கு ஆசி கூறும்போது நீங்களெல்லாம் தங்கமான பிள்ளைகள், தைரியமான பிள்ளைகள், ஒழுக்கமான பிள்ளைகள், சேவை செய்யும் பிள்ளைகள், சிந்திக்கும் பிள்ளைகள் என்று சொல்லி வாழ்த்துவார்கள்.

மகத்தான காரியங்களைச் செய்வதற்கு உழைப்பு அவசியம் என்று அய்யா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். இதற்கு அவர்களே எடுத்துக்காட்டாக வாழ்ந்தார்கள். உலகில் ஒருவருக்குக் கல்வி புகட்டுதலைப் போன்ற நற்செயல் வேறொன்றுமில்லை. அய்யா அவர்கள் எத்தனையோ கோடானு கோடி மக்கள் பயன்பெற பல கல்வி நிறுவனங்களை நிறுவி அதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர்கள் என்று எண்ணும் போது

*'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு'*

என்னும் குறள் வரிகள் நம் மனதில் ஓடுகின்றன. கல்விக்காக வாழ்வையே தியாகம் செய்த உத்தம சீலர் நம் அய்யா அவர்கள்.

அய்யா அவர்கள் பொறுமையே வடிவானவர்கள். அவர்களின் பொறுமையும், சாந்த குணமுமே செயற்கரிய செயல்களைச் சாதிக்க அவர்களுக்கு உறுதுணையாக இருந்தது. அவர்களுக்கு இன்னல்கள், நோய்கள் ஏற்பட்ட போதெல்லாம் அதனைத் தாங்கக் கூடிய சக்தியையும், சகிப்புத் தன்மையையும் வழங்கியது இந்தப் பொறுமை தான் என்றால் மிகையாகாது. திண்ணிய நெஞ்சமும், தெளிந்த நல் அறிவும், எண்ணிய முடிக்கும் ஆற்றலும் பெற்ற நம் அய்யா அவர்கள் நம்மிடையே இல்லையே என்பதை நினைத்தால் மனம் வேதனையுறுகிறது. நமக்கெல்லாம் தாயாக, தந்தையாக, குருவாக இருந்தவர் அய்யா அவர்கள். எண்ணத்தில் உயர்ந்தவராய், ஏற்றமிகு கண்ணியராய், திண்ணிய நெஞ்சினராய், தெளிந்த நல்

அறிஞராய், பார் போற்றும் பண்பாளராய்த் திகழ்ந்த அய்யா அவர்கள். *'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'* என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்கள்.

'சிங்கம் போல் வீரமும், யானை போல் பலமும் கொண்டு, பிறர் நலம் பேணுதலில் அவருக்கு இணை அவரே என்று வாழ்ந்த அய்யா அவர்கள் இன்று நம்மிடையே இல்லையே என்பது நமக்கெல்லாம் பெரிய குறை. அய்யா அவர்களின் பொன்மொழிகளும், அறிவுரைகளும் என்றென்றும் நம்முடன் இருந்து நமக்கு வழி காட்டும்.

* ✪ *

# வள்ளலாரும் அய்யா அவர்களும்

செல்வி. த. முருகஜெயந்தி

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே பாரதப் பெருநாட்டில் சமய சீர்திருத்தவாதிகளில் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர் இராமலிங்க அடிகள் எனப்படும் திருவருட் பிரகாச வள்ளலார் ஆவார். வள்ளற் பெருமானார் சமரசசுத்த சன்மார்க்க சங்கம் என்ற அமைப்பினை நிறுவி, அதற்கெனத் தனியாக கொடியும், கொள்கைகளும், வேலைத்திட்டங்களும் ஏற்படுத்தினார். வள்ளற்பெருமான் வகுத்த கொள்கைகள்— சமயங்களிடையே சமரசம் காணல், தெய்வம் ஒன்று என்றுணர்தல், சாதி, குல வேற்றுமைகளை அகற்றல், மரணமில்லாப் பெருவாழ்வு அடைதல், ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் முதலியனவாகும். இறைவனை ஜோதி வடிவில் வழிபடுதல் முக்கிய அம்சமாகும். பெருமான் அவர்கள் 1874ஆம் ஆண்டு ஜோதியில் இரண்டற கலந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய அய்யா அவர்கள் வள்ளலார் வழிப்படி வாழ்ந்து காட்டினார்கள். 1903ஆம் ஆண்டு தோன்றிய அய்யா அவர்களுக்கும், வள்ளலாருக்கும் 29 ஆண்டுகளே இடைவெளி. உத்தம குணமுடையோர் — ஒழுக்க நெறியில் வாழ்க்கை நடத்துவோர் சொல்லும், செயலும் இறைவனுடைய சொல்லும் செயலும் ஆகும் என்பது அய்யா அவர்கள் கண்ட முடிவு.

'நானுரைக்கும் வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை' என்ற வள்ளலாரின் கூற்றுப்படி அய்யா அவர்கள் வாழ்ந்தார்கள்.

பக்தர்கள் ஒன்றுகூடி இறைவனை வழிபடும் கூட்டுவழிபாட்டு முறை பாரதநாட்டில் பண்டைக்காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வருகிறது. வள்ளற் பெருமான் இக்கூட்டு வழிபாட்டு முறையை முதலில் வடலூர் சத்தியஞான சபையிலும், பின்னர் மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்திலும் தம்முடைய சீடர்களுடன் சேர்ந்து நாள்தோறும் நிகழ்த்தி வந்தார். இக்கூட்டு வழிபாட்டில் அனைவரும் ஒன்று சேர்ந்து இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்குப் பயன்படும் வகையில் 'சுத்தசன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்' ஒன்றையும் உரைநடைத்தமிழில் வள்ளலார் இயற்றியருளினார்.

இதேபோன்று அய்யா அவர்களும் வித்யாலயத்திலும், சாரதாலயத்திலும் இராமகிருஷ்ணர், சாரதாமணி திருக்கோயிலைக்கட்டி, மாணவ மாணவிகளுடன் சேர்ந்து தினந்தோறும் காலை, மாலை இருபொழுதும் கூட்டுவழிபாடு செய்து வந்தார்கள். நாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் ஆண்டவனுக்கு அர்ப்பணமாக்கிச் செய்ய வேண்டும்' என்பார்கள். 'நீங்கள் உங்கள் காரியங்களைச் செய்வதற்கு முன் இறைவனிடம் வேண்டுங்கள். அவன் உங்களுக்கு வேண்டியதெல்லாம் அருளுவான்' என்று வாழ்த்துவார்கள்.

வடலூர் சத்தியஞானசபையில் அனைத்து மதத்தினரும் கலந்து கூட்டுவழிபாடு நடத்த வள்ளலார் வழி வகுத்தது போல

அய்யா அவர்களும்சர்வ மதத்தினரும்கலந்து கொள்ளத்தக்க வகையில் கூட்டுவழிபாட்டினை நடத்தி வந்தார்கள். அதுபோல அனைத்து மதத் தெய்வங்களையும் குறிப்பிடும் பாடல்களும்,ஒவ்வொருஞாயிறு மாலையும்சாரதாலயத்தில் பாடப்படும்.

வள்ளலார் மிகச்சிறந்த சீர்திருத்தவாதி. அந்தக் காலத்திலேயே பெண்ணுரிமை பற்றி பேசியவர். ‘பெண்களுக்குத் தியானம் முதலியவற்றைக் கற்பிக்க வேண்டியது அவசியம்என்றுவள்ளலார்குறிப்பிடுகின்றார். அய்யா அவர்களும் இராமலிங்க அடிகளின் கூற்றுப்படி பல்கலைக்கழகத்தில் மாணவிகளுக்கு ‘தியானப்பயிற்சி’ வகுப்பகள் நடத்த ஏற்பாடுகள் செய்தார்கள்.

வள்ளலார் அருளிய இனிய திருவருட்பா பாடல்கள் ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளது. அய்யா அவர்கள் சென்னை மாநில கல்வி அமைச்சராக இருந்தபோது தமிழ் வளர்ச்சிக்காகப் பணிகள் பல புரிந்தார்கள்.உயர்நிலைப்பள்ளிகளிலும்,கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாக்கினார்கள். ‘தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்’ ஒன்றை நிறுவி தமிழில் வரும் சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்ததோடு மட்டுமின்றி தமிழில் கலைக்களஞ்சியம் 10 தொகுதி–களாகவும், குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளாகவும் வெளிவரக் காரணமாக இருந்தார்கள். பள்ளிகளில் திருக்குறளை முதன்முதலாக பாடத்திட்டத்தில் இடம்பெறச் செய்த பெருமை நம் அய்யாவையே சாரும். அய்யா அவர்களால் தான் இளைய சமுதாயத்தினர்

திருக்குறளைப் பற்றி தெரிந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றுள்ளார்கள்.இன்றும்தமிழைவளர்ப்பதற்காகவும்பக்தி நெறியைப்பரப்புவதற்காகவும்அம்மா அவர்கள்,அய்யாவின் வாரிசாக இருந்து 'தேவார திவ்வியபிரபந்த இசைக்கலை விழாவினை பல்கலைக்கழகத்தில் ஆண்டு தோறும் நடத்தி வருகிறார்கள்.

காந்தியடிகளின்கொள்கையானஅகிம்சையைஅய்யா அவர்கள் பின்பற்றினார்கள். வள்ளலாரின் 'ஜீவகாருண்ய ஒழுக்கமும்', 'ஆன்மநேய ஒருமைப்பாடும்' அய்யா அவர்களின் வாழ்க்கை முழுவதும் அமைந்திருந்தது. பிற உயிர்களிடத்தில் இரக்கம், அன்பு காட்டுதல், எப்போதும் உண்மையே கடைப்பிடித்தல், பிறருக்கு உதவுதல் ஆகியவற்றை அய்யா அவர்கள் கடைப்பிடித்ததோடு மட்டுமின்றிசெயல்படுத்தவும்செய்தார்கள்.சாரதாலயத்தின் மையமாக அமைந்திருக்கும் இராமகிருஷ்ணர் சாரதாமணிதேவியின் ஆலயத்தில் அகிம்சையைப் பற்றிய காந்தியடிகளின் வாசகத்தைப் பொறித்துள்ளார்கள். இதே போன்று வள்ளற் பெருமானும் சத்திய ஞானசபையின் நுழைவாயிலில் அகிம்சையைப் பற்றிய வாசகங்களைப் பொறித்துள்ளார்கள். உயிர்க்கொலை செய்யக் கூடாது என்பதை தம் குறிக்கோளாகக் கொண்ட அய்யா அவர்கள் வாழ்நாள் முழுவதும் சைவஉணவே உண்டார்கள். அய்யா அவர்களின் நிறுவனங்களில் நடத்தப்படும் விடுதிகளிலும் சைவ உணவே அளிக்கப்படுகிறது.

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய' வள்ளலாரைப் போன்ற இரக்ககுணம் அய்யா அவர்களிடம்

இருந்தது. அய்யா அவர்கள் மாணவிகளிடம் உரையாற்றும் போது

*'நாம்பிறருக்காகஅனுதாபம்கொள்ளவேண்டும், யாரேனும் நம்முடைய உதவியை நாடிவரும்போது அவர்களை அலட்சியம் செய்யக்கூடாது, மாறாக அவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்கு உதவி புரிய வேண்டுமென்றசிறந்த குணத்தை சிறுவயதிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும்'*

என்று சொல்வார்கள்.

மரணமிலாப் பெருவாழ்வு அடைந்த வள்ளலாருக்கும் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்த அய்யா அவர்களுக்கும் இடையே மிகுந்த ஒற்றுமையைக் காணலாம்.

நாம்மிகஉயர்ந்தகாரியங்களைச்செய்வதற்குப்பிறந்து இருக்கிறோம் என்ற அய்யா அவர்களின் கருத்துப்படி, எந்தெந்தவழிகளில்சமுதாயத்தில்சேவைசெய்யமுடியுமோ அந்தந்த வழிகளில் தொடர்ந்து சேவை செய்து அகிலஉலக அளவில் முதல்தரமான பல்கலைக்கழகமாகத் திகழ மாணவிகளும், ஆசிரியர்களும் உழைக்க வேண்டும்.

*'வெறும் உடல் பலம் மாத்திரம் இந்திய*
*மக்களின் இலட்சியமாயிருக்க முடியாது*
*அத்துடன் ஆன்மீக பலமும் சேர்ந்திருக்க வேண்டும்.*
*தங்களிடம் இருக்கும் சக்தியை அவர்கள்*
*தங்களுக்கென பயன்படுத்திக் கொள்ளாமல்,*
*மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து,*
*அவர்களுக்காகத் தமது உடைமை அனைத்தையும்*
*தியாகம் செய்ய முன்வர வேண்டும்'*

*— அய்யா அவர்கள்*

☆ ☆ ☆

# 'மனிதருள் மாணிக்கம்' அய்யா அவர்கள்

செல்வி சு. கௌசல்யா

அய்யா அவர்கள் ஓர் அவதாரப் புருஷர். பெரிய பரம்பரையில் பிறந்து, வக்கீல் தொழிலுக்குப் படித்து அமைச்சராகிப் பின் தன்னையே கல்விப் பணியிலும், தெய்வீகப் பணியிலும் ஈடுபடுத்திக் கொண்டவர்கள். அத்தகு 'மனிதருள் மாணிக்கமாகிய' அய்யா அவர்களைப் பற்றி என் நினைவிலுள்ள எண்ணங்கள் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முனைந்த போது, தமிழில் தான் எழுத வேண்டும் என்று தோன்றியது. தாய்மொழியாகிய 'தமிழ்' அய்யா அவர்களின் வாழ்க்கையில் தலையாய இடத்தைப் பெற்றிருந்தது தான் அதற்குக் காரணம்.

நான் சிறுவயதில் குரு பூஜையில் கலந்து கொள்ள என் பாட்டி, தாயார் மற்றும் உறவினர்களுடன் வித்யாலயத்திற்கு சென்றுள்ளேன். பஜனைப் பாடல்கள் மற்றும் பல தமிழிசைப் பாடகர்கள் பாடும் பாடல்கள் கேட்டு வீடு திரும்பியுள்ளோம். அய்யா அவர்களைப் பார்க்கச் சென்ற போதெல்லாம் எங்களுக்கு இனிப்பு வழங்குவார்கள். பெரியவர்கட்குப் புத்தகம் கொடுப்பார்கள். பிறகு நான் கல்லூரியில் சேர்ந்து உயிர் வேதியியல் மற்றும் உணவியல் படித்துப் பட்டம் பெற்ற போது பரிசுகள் பெற்றுள்ளேன். முதுகலைப் பட்டத்திற்கான, 'தங்கப் பதக்கம்' அய்யா

அவர்களின் திருக்கரங்களால் பெற்றேன். அய்யா அவர்கள் பதக்கத்தை வழங்கும் போது, 'இது போல் நிறைய வாங்க வேண்டும்' என்றார். அப்பொழுது அம்மா அவர்களும் உடன் இருந்தார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அய்யா அவர்கள் கொடுத்த பரிசு என்று சற்றுப் பெருமிதமாகவும் இருந்தது. வீட்டிற்குச் சென்றவுடன் தந்தையாரிடம் பதக்கத்தைக் காண்பித்தேன். அவர் 'நன்று' (Good) என்றார். எந்த பரிசு, சான்றிதழ்கள் வாங்கினாலும், 'நன்று' என்று தான் கூறுவார். அதற்கு மேல் எதுவும் கூறமாட்டார். இரண்டு தினங்கள் கழித்து நான் பரிசு பெற்ற புகைப்படத்தைக் காண்பித்தவுடன் 'அடடே! மிக்க நன்று (Very Good). இதைப் பத்திரமாக வைத்துக் கொள். 'அய்யாவும், உங்கள் பெரிய மேடமும் உள்ளார்கள்' என்றார். 'பரிசை விட, பரிசை யாரிடம் வாங்கினோம் என்பது சிறந்தது போலும் என்று!' நான் நினைத்துக் கொண்டேன். அன்று முதல் அந்தப் புகைப்படம் என் பொக்கிஷத்துள் ஒன்றாக மாறிவிட்டது. அவ்வப்பொழுது எடுத்துப் பார்த்துக் கொள்வேன்.

அய்யா அவர்களிடம் என்னைக் கவர்ந்தது, அவர்கள் தமிழ்பால் கொண்ட ஆர்வமும், தமிழுக்கு அவர் ஆற்றிய தொண்டும் தான்.

தமிழோடு இசை பாடல் மறந்தறியாத அய்யா அவர்கள் கல்லூரி வளாகத்தில் இசைத்துறையை முதலில் ஆரம்பித்தார்கள். இது அய்யா அவர்களுக்குள் இருந்த 'இறையுணர்வைக்' காண்பிக்கிறது. எப்பொழுதும்

'ஆண்டவன் அருளாலே' என்று அவர் கூறுவது நினைவிற்கு வருகிறது. ஆண்டவன் அருளால்தான் அவர் இந்த மகத்தான கல்விச் செல்வத்தை இந்நாட்டுக்குக் குறிப்பாக மகளிர்க்கு அளிக்க முடிந்தது.

அய்யா அவர்களின் மிகுந்த அன்பினை சாரதாலய மாணவியர்களை அழைப்பதில் காணலாம். 'அன்பான குழந்தைகள், தங்கமான குழந்தைகள்' என்று கூறுவார்கள். இவ்வளவு பெரிய பதவியில் (Chancellor, Ex-Minister) இருப்பவர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவியரிடம் இத்தகைய அன்பான மொழியில் பேசி, அவர்களை உற்சாகப்படுத்தியது, எல்லாமே psychology-terms இல் `positive thinking' - 'self realisation' என்பார்களே – அது இது தானோ? என்று நான் நினைத்துக் கொள்வேன்.

மாணவியர் மற்றும் ஆசிரியர்களை, 'நாம் மிக உயர்ந்த காரியங்கள் செய்வதற்காகப் பிறந்திருக்கிறோம்' என்று கூறுவது அவரது உழைப்பின் உயர்வைக் காண்பிக்கிறது. மேலும் அவரது காந்தீயக் கொள்கைகள், தூய்மை, கனிவான பேச்சு, தெளிந்த சிந்தனை, எதையும் தொலைநோக்குப் பார்வையுடன் ஆராய்தல் – இவை மட்டுமன்றி மானுடத்தின் மேல் அவர் காட்டிய 'மனித நேயமும்' – என்னைக் கவர்ந்தவை.

நான் 1991ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஆராய்ச்சிக் குழுவில் பணி புரிந்த பொழுது, ஒரு நாள் மாலை முனைவர். சாந்தா இராஜகோபால் அவர்கள் வந்து, 'உஷா,

யாராவது ஒருவர் வேண்டுமே? நமது அய்யாவுக்குச் சிற்றுண்டி எடுத்துச் செல்ல திருமதி. சுபாஷிணி (வேதியியல் துறை) இசைந்துள்ளார்கள். அவருடன் இன்னொருவர் செல்ல வேண்டும் என்றார். முனைவர் உஷா சந்திரசேகர் என்னிடம் 'செல்கிறாயா?' என்றார்கள். நான் உடனே 'வீட்டிற்கு நான் வர நேரமாகும், வித்யாலயம் செல்கிறேன்' என்று தகவல் கொடுத்து விட்டு அவருடன் சென்றேன். அய்யா அவர்களுக்கு வணக்கம் கூறி ஆசிகள் பெற்றோம். பின் சுபாஷிணி மிஸ், 'அய்யா, உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி' என்றார்கள். மேலும் அம்மா, எங்களை அனுப்பி வைத்துள்ளார் என்றோம். உடனே அய்யா அவர்கள், 'தெரியுமே! அம்மா எப்பொழுதும் சாரதாலய அக்காக்களை அனுப்பி விடுவார்களே' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்கள். பின் அய்யா அவர்களுக்குச் சிற்றுண்டி அளித்தோம். அய்யா அதற்குள், 'யாரப்பா, அக்காவுக்கு நமது சிற்றுண்டி கொண்டு வாப்பா' என்றார்கள். பிறகு எங்களையே (அன்பு உபசரிப்பில்) சாப்பிட வைத்து விட்டார்கள். அவர்களும் சிறிது சிறிதாகச் சாப்பிட்டார்கள். சுபாஷிணி மிஸ் நிறையப் பேசினார்கள். அவர்கள் தயக்கமில்லாமல் பேசிய போது, அய்யா அவர்களுக்கு இவ்வளவு தெரிந்தவரா இந்த மிஸ்' என்று வியந்தேன். நான் அய்யா அவர்களின் நலம் விசாரித்ததோடு கொஞ்சம் பயத்தோடு பேசாமல் உட்கார்ந்திருந்தேன். பின் அய்யா அவர்கள் என்னை எந்தத் துறை, வீடு தொலைவில் உள்ளதா, எப்படிச் செல்வாய் — என்று விசாரித்தார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. இந்த நிகழ்ச்சியை என் வாழ்வில் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன்.

*'திருவாசகத்திற்கு உருகார் – ஒரு வாசகத்திற்கும் உருகார்'* என்பது பழமொழி. அய்யா அவர்கள் அரங்குகள் மற்றும் கட்டிடங்கள் இவற்றிற்குப் பெயர் வைப்பதிலும் கூட இறையுணர்வைக் காண்பித்துள்ளார்கள். இந்தப் பெயர்களில் எனக்கு ப் பிடித்தது, 'திருச்சிற்றம்பலம்'. சிவனடியார்கள் அடிக்கடி கூறும் – இறையாண்மை மிக்க சொல். தேவாரத்தில் தான் எத்துணை முறை வருகிறது. நம்மை இந்த அரங்கின் பெயரை அடிக்கடி கூற வைத்து, பெருமை சேர்த்துள்ளார்கள். இத்தனை சிறப்பு மிக்க அய்யா அவர்கள் நம்மை என்றும் நல்வழி நடத்திச் செல்வார்கள்.

இந்த எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு அளித்த 'வேந்தர் அம்மா' அவர்களுக்கு என் நன்றி. நம் சாரதாலயத்தை நல்வழியில் நடத்திச் செல்லும் அம்மா அவர்களைப் புத்தாயிரத்தில் புதியதாய் வாழ்த்த வயதில்லாததால் வணங்கி மகிழ்கிறேன்.

* * *

# கருணை வடிவான அய்யா அவர்கள்

முனைவர். உஷா சந்திரசேகர்

*உருகாத மனமொன்றும் உண்டோ? — என்றும்*
*ஊருக்கு உழைத்த உத்தமர் தம் பெயர் கேட்டு*
*உருகாத மனமொன்றும் உண்டோ?*

*சாய்க்காத செவி ஒன்றும் உண்டோ? — எங்கள்*
*சகலகலா வல்லவராம் அய்யாவின் குரல் கேட்டு*
*சாய்க்காத செவி ஒன்றும் உண்டோ?*

*பாடாத நாவொன்றும் உண்டோ?*
*எங்கள் நலனுக் குழைத்திட்ட நல்லவர் தம் செயல் கண்டு*
*பாடாத நா வொன்றும் உண்டோ?*

*வணங்காத தலை ஒன்றும் உண்டோ?*
*எங்கள் அனைவரின் நலன் கருதி*
*அருஞ்செயல்கள் செய்திட்ட அய்யாவை நினைந்து*
*வணங்காத தலை ஒன்றும் உண்டோ?*

*வானவரும் போற்றும் மன்னவனே போற்றி*
*வந்தென் சிந்தை புகுந்தாய் போற்றி*
*ஊருக்கு உழைத்த உத்தமரே போற்றி*
*ஓங்கு புகழ் பெற்று நிலைத்தாய் போற்றி*
*தேனினும் இனிய மனம் கொண்டவா போற்றி*
*தேவருள் தெய்வம் ஆனாய் போற்றி*
*கடலினும் சால கருணையுள்ளம் கொண்ட*
*அய்யா நின் தாள் போற்றி! போற்றி!*

பெண் கல்வி தந்த எங்கள்
ஒளி விளக்கே! ஒப்பில்லா மாணிக்கமே!
சுடர்மிகு அறிவினை வளர்த்த.
தூடா மணியே! அணையா விளக்கே!
தளர் வறியா தன்னம்பிக்கை வளர்த்த
தனிப் பெருஞ் ஜோதியே!
அருளே! அருள் மணிக் குன்றே — உனைப்பாட
எனக்கேது வார்த்தை?

அய்யாவின் புகழ்தன்னைப் பாட நாம்
அனைவரும் கூடுவோம் அரங்கினில் ஒன்றாக.
முன்னேற்றம் காணவே வந்தார் — பெண்
முன்னேற்றம் காணவே வந்தார்
சாரதாலயம் நமக்கிங்கு தந்தார் — உலகிலே
மேலோங்கி நிற்க — நாம்
உலகிலே மேலோங்கி நிற்க
பல்வேறு வழிகளை உருவாக்கித் தந்தார்
சாரதாலயம் பெயர் சொன்னவுடனே
அகிலமும் உணர்ந்திடும் வழியிங்கு செய்தார்

✤ ❆ ✤

# தமிழ்த்தாய் புதல்வர்

முனைவர். து. லலிதா

*வாழ்க! வாழ்க!! புகழ் வாழ்க!!!*
*அவினாசிலிங்கப் பெருந்தகை புகழ் – வாழ்க! வாழ்க!!*

*தியாகத் திருவுரு தனிப்பெரும் சீலர்*
*இந்தியத் தாயின் விடுதலை பேணினார்*
*கல்விப் பணிக்கே அர்ப்பணித்தார் தம்மை*
*சாரதாலயத்தின் தனிப் பெரும் சிற்பி – வாழ்க! வாழ்க!!*
*ஆன்மீக நெறியில் ஐம்புலன் அடக்கி*
*தார்மீக வாழ்க்கை தரணியில் வாழ்ந்து*
*மன்பதை உலகம் புகழ்ந்தே போற்றிட*
*மகத்தான சேவையைமாண்புறச் செய்தார் – வாழ்க! வாழ்க!!*

*கருணையின் வடிவே கற்பகத் தருவே*
*காமதேனுவே கண்கண்ட தெய்வமே*
*உழைப்பின் உயர்வே உத்தமத் தலைவரே*
*செக மெலாம் புகழும் தமிழ்த்தாய் புதல்வரே – வாழ்க! வாழ்க!!*

*வாழ்க்கையில் எளிமை காட்டிய வள்ளலே*
*பாழ்த்த பிறவியை பயனுறச் செய்தவரே*
*தாழ்வுற்ற பெண்களுக்கு கல்விக் கண் அளித்தவரே*
*உலகெலாம் நும்புக ழோசை பரவவே – வாழ்க! வாழ்க!!*

* * *

# கல்விக்கோர் ஆலயம் அமைத்தவர்

முனைவர். என். ஜெயபூரணி

*அன்புக்கோர் அய்யா!*
*அவினாசிலிங்கம் அய்யா!*
*ஆலயம் அமைத்த அய்யா!*
*கல்வி ஆலயம் அமைத்த அய்யா!*
*இன்முகம் கொண்ட அய்யா!*
*இனியவை பல கூறிய அய்யா!*
*ஈகை உள்ளம் மிக்க அய்யா!*
*ஈகைகள் பல செய்த அய்யா!*
*உன்னத நோக்கமுள்ள அய்யா!*
*உன்னதப் பணி ஆற்றிய அய்யா!*
*ஊருக்கென உழைத்த அய்யா!*
*ஊர்மக்கள் போற்றிய அய்யா!*
*எல்லோரும் வணங்கும் அய்யா!*
*எல்லோரும் உய்ய வழிகாட்டிய அய்யா!*
*ஏட்டினிலே வாழும் அய்யா!*
*ஏடுகள் பல எழுதிய அய்யா!*
*ஐயம் இன்றி வாழ்ந்த அய்யா!*
*அன்னியர் ஆதிக்கத்தை ஒழித்த அய்யா!*
*ஒப்பற்றவராய் வாழ்ந்த அய்யா!*
*ஒப்பற்ற நாட்டுப்பணி புரிந்த அய்யா!*
*ஓம்கார நாதத்தை ரசித்த அய்யா!*
*ஓம்காரம் ஒலிக்க கூடங்கள்*
*அமைத்த அய்யா*
*ஔவை கூறியதை அறிந்த அய்யா!*
*தமிழுக்குப் புகழ் சேர்த்த அய்யா!*

❋ ☆ ❋

# சத்திய சோதனை நாயகன்

முனைவர். ஜீ.பி. ஜெயந்தி

*பிரபஞ்சமெனும் சோலை தனில்*
*மெய்ஞ்ஞானமெனும் வேர் கொண்ட பெருமரம்*
*தந்திட்ட ஞானப்பழம் தான் அய்யா*
*தானே கனிந்து கிளையினின்றும் பிரிந்து*
*விழுந்தது அந்த சிவப்பழம்*
*வருடம் பல ஆனாலும் பசுமையாக*
*விட்டுச் சென்றார் தம் நினைவை நம் அய்யா!*

*திருப்பூர் நகரம் நமக்குத் தந்த ஒப்பற்ற*
*பெருந்தகையாம் அய்யா ஒருநாளேனும்*
*தனக்கென வாழ்ந்தாரில்லை – மாடி மனை*
*கோடி செல்வம் ஈட்டும் செல்வரெல்லாம்*
*ஓடி ஓடி பொருளைத் தேட இப்புண்ணிய சீலர்*
*மண்ணில் கல்வி வளர அறம் ஓங்க இறையுணர்வு தழைக்க*
*தமக்கிருந்த சொத்தையெல்லாம் அளித்துச் சென்ற*
*தகைமை தான் என்னே! என்னே!!*

*பாரதியின் புதுமைப் பெண்ணை உருவாக்கப்பாடுபட்டார்*
*சாரதியாய்த் தான் நின்று தன்னம்பிக்கை என்றதோர்*
*குதிரை பூட்டி*
*வீரமெனும் விசையைத் தட்டி மன உறுதி எனும்*
*கடிவாளம் கொண்டு*

*தீரம் மிகுந்த தேரில் ஏறி பாரம் மிகுந்த நம் வாழ்க்கை தன்னை*
*நேர்த்தியாகச் செப்பனிட்டார்*

*மேகத்தினூடே மறைந்திட்டாலும் சூரியன்*
*ஒளியை மட்டும் மறைப்பதில்லை*
*நம்மை விட்டு மறைந்திட்டாலும் அய்யா நமக்கு*
*அறிவெனும் ஒளிதீபம் என்றுமே அளித்திட்டார்*
*அவர் ஆசி என்றும் நமக்கு உண்டு — அவர்தம்*
*புகழ் பேசி மனத்தில் வலுவேற்றி — அவரவர்க்கு*
*இட்ட பணியைச் செவ்வனே செய்திட்டால்*
*இமயத்தின் சிகரமும் இங்கே நம் கையடக்கம்!*

*சத்தியசோதனை நாயகனின் சத்தான கருத்துக்களை*
*சத்தியமாகப்பின் தொடர்ந்தார் — சுத்த சித்தராக*
*வாழ்ந்திட்டார்*
*பச்சிளம் குழந்தை முதல் பல்லிழந்த மாதர் வரை — இந்த*
*வித்தகச் செல்வர் வாழ்க்கையைக் கண்டு கற்க வேண்டிய*
*முத்துச் செல்வம் ஏராளம்!*

*வானவில்லின் நிறங்களுக்கு மூலநிறம் வெண்மை நிறம்*
*தானறிந்த வண்ணத்துள் எம் அய்யா*
*தேர்ந்தெடுத்ததும் வெண்மையன்றோ*
*தூய்மைக்கும், வாய்மைக்கும், எளிமைக்கும் விளக்கமாம்*
*இவ்வெண்மை — அவர்தம்*
*கதராடையிலும் திருநீற்றிலும் மிளிராதிருந்த நாளும்*
*உண்டோ?*

மாலை வேளை விளக்கேற்றும் நேரம்
அன்றாடம் நாம் காணும் காட்சியின் அழகே அழகு
வெண்ணிற அம்பாசிடர் வளாகத்துள் நுழைந்ததுமே
துள்ளி வரும் மான்களென குழந்தைகளின் ஓட்டம்
அய்யாவைச் சுற்றி நின்று 'வணக்கம் அய்யா'
'வணக்கம் அய்யா' என்றிடும் அன்புக் கூட்டம்
'நல்லாயிருப்பா, நல்லாயிருப்பா' என்று அம்மலர்களை
அரவணைக்கும் அய்யாவின் அன்பு மழையில் நனையும்
மழலைகளுக்குப் பெற்றோரை விட்டு வந்த ஏக்கமும் தான்
ஏது?

கல்விச் செல்வத்துடன் இறையுணர்வும் புகட்ட வேண்டும்
என்பது அவர் தம் நோக்கம் — வருங்கால
பாரதத்திற்குச் சிறந்த பிரஜைகளை
இக்கல்வி தருமென்று அவர் கண்டார்
மார்கழிப் பனியிலும் வளாகத்தைச் சுற்றி பாவை
நோன்பிருந்து
பஜனை பாடும் மாணவ மணிகள்
அக இருளை நீக்கவல்ல அகண்ட பஜனைகளிலும்
ஆர்வத்துடன் பங்கேற்கும் கல்வி கற்கும் மாணவியர்.

காற்றுக்கும் வேலியுண்டோ கடலுக்கும் மூடியுண்டோ
எம் அய்யாவின் அன்புதனை அளக்கவும் கோலுண்டோ
எல்லோரும் நல்ல பிள்ளைகள் தங்கமான பிள்ளைகள்

புத்திசாலிப் பிள்ளைகள் கெட்டிக்காரப் பிள்ளைகள்
என்பதே அவர் கணிப்பு — இதை நம்
வாயால் சொல்ல வைத்தே பூரிப்பார் பல தருணம்!

வாழ்க்கை எனும் கல்வி தனை அறிவு என்னும்
கரும்பலகையில் அன்பு எனும் எழுதுகோலால்
அழகாகப் புகட்டி வந்த ஆன்றவிந்தடங்கிய ஆசானாய்
அவர் திகழ்ந்தார் — அதை
ஐயமறக் கற்றறிந்து அவர் காட்டிய பாதை தனில்
பீடு நடை போடுதலே நாம் அவர்க்காற்றும் பணியாகும்!
அய்யா அவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களுள்
பெருஞ்சொத்து, அவரது பிம்பமாக
தாம் கொண்ட இலட்சியங்களை முடித்து வைக்க
கனவுகளை நனவாக்க
அம்மாவெனும் அன்பு தெய்வத்தை நமக்களித்தார்!
இதற்கெல்லாம் நம் நன்றியை ஏட்டில் எழுதிடத்தான்
இயலுமா
கவியில் பாடிடத்தான் முடியுமா?

அய்யாவெனும் பெருந்தகையின் புகழைப் பாரெங்கும்
பரப்பிட
நம் நன்றியை அவர்க்குச் செலுத்த
நாம் ஆற்றக்கூடிய ஒரே பணி — அவர்தம் பாதையில்
அவர் காட்டிய நெறியில் வெற்றி நடைபோட்டு
அவரது இலக்கினை நிறைவேற்றுதலேயாம்!

◆ ❋ ◆

# நம் அய்யா அவர்கள்

முனைவர். ஜி. பாரதா

★ காலச் சக்கரத்தில்
என்றும் அழியாத
அக்னிச் சூரியனாய்
★ குளிர் நிலவாய்
★ சுதந்திரத் தியாகியாய்
★ அன்பின் ஊற்றாய்
★ பணிவின் சிகரமாய்
★ பொறுமையின் உறைவிடமாய்
★ சொல்லின் இலக்கணமாய்
★ கல்வி மந்திரியாய்
★ நெஞ்சத்தின் காவியமாய்
★ வாழ்வின் ஒளியாய்
★ இலட்சிய வாழ்வாய்
இன்னும்
என்ன சொல்ல?
இத்தனை வரிகள்
வேண்டாம்
ஒன்றே போதும்!
ஒரு வார்த்தையே
போதும்!

★ அதுதான் அன்புடன் – நாம் அழைக்கும் அய்யா!!

கோவையில்....

பெண்கள் வளர்ச்சிக்கு – ஒரு

சாரதாலயம்

மற்றும் ஒரு

வித்யாலயம்!

மனையிலும்

அகிலத்தை

வெல்ல – ஒரு

மகளிர் கல்லூரி.

இதன் மூலம்

யாவும் – ஒரு

சிறு விளக்கொளி!

அதுதான்...

★ தங்கமான குழந்தைகளே!

என்று பாங்குடன் அழைக்கும்

என்றும் நாம்

போற்றும்

அய்யா அவர்கள்!

❑ ✳ ❑

# எங்கள் அய்யா அவர்கள்

திருமதி. வெங்கடலட்சுமி

*அன்பும் அருளும் நிறைந்த அய்யாவே*
*அவினாசிலிங்கப் பெருந்தகையே வாழ்க!*

*ஆன்மீகத் துறையில் இராமகிருஷ்ணர் சீடராய்*
*ஆண்டவன் அருளென அமைதியாய் செயல்பல*
*ஆரவாரம் இல்லாமல் ஆயிரம்பணி செய்துஇன்று*
*ஆல்போல் கல்வியை வளர்த்துநல் சேவைசெய்த*

*இன்முகத்துடன் எல்லாச் செயல்களும் செய்து*
*ஈன்ற தம் தாய் தந்தை நினைவாக எங்களுக்கு*
*கல்விச் சாலையும் பலப்பல வசதிகளும்*
*பட்டி தொட்டி கிராமங்களில் ஏற்பாடு செய்த*

*உலகில் அனைவரும் திருக்குறள் மேன்மையை*
*ஊக்கமாய் அறிந்து நல்பயன் பெறவும்*
*எழுத்தறிவினை கல்லாத முதியோர்க்கும் போதித்து*
*ஏறுபோல் நின்றிங்கு ஆர்வமாய் செய்த*

*ஐயம் திரிபற நாட்டு நலத் திட்டமூலம்*
*ஒன்றிய கல்வியும் சுயவேலை வாய்ப்பும் தந்து*
*ஓடித்திரியும் மாணவியர் கூடி செய்திட*
*ஔஷதமாய் இன்று சமுதாயம் சீர்பட*

*ஆண்களுக்கென ராமகிருஷ்ண வித்யாலயம்*
*பெண்களுக்கென சாரதாலயம்*
*இளைஞர்களுக்கென விவேகானந்தபுரம்*
*பல்துறை பயிற்சிக்கென சிரமிக் வித்யாபீடம்*
*தந்த அய்யாவே!*

* ❖ *

# இலட்சிய மலரோன்

திருமதி. இரா. சுசீலா

*பணிந்தோம் உந்தன் பதந்தனையே – அய்யா!*
*அவினாசிலிங்கம் பெருந்தகையே!*

*அன்பும் பண்பும் நிறைந்தவரே – நீவிர்*
*என்பும் பிறர்க்கென வாழ்ந்தவரே – அய்யா!*

*'என்கடன் பணிசெய்து கிடப்பதென்றீர்' – நீவிர்*
*'உன்னால் எல்லாம் முடியுமென்றீர்' – அய்யா!*

*'பயன்கரு தாமல் உழைத்திடு' என்றீர்*
*'உயர்வே என்றும் எண்ணிடு' என்றீர்*

*'எளியனாய்த் தூயனாய்த் திகழ்ந்திடு' என்றீர்*
*'பணிவுடன் பணிபல செய்திடு' என்றீர்*

*'எல்லோரும் ஓர்குலம் என்றிடு' என்றீர்*
*'நல்லோராய் நானிலத்து வாழ்ந்திடு' என்றீர்*

*'கும்மியடி பெண்கள் கும்மியடி – அன்பு*
*அய்யா புகழ்பாடிக் கும்மியடி*
*நம்மைவ ளர்த்திடும்' சாரதாலயத்தின்*
*தந்தை புகழ்பாடிக் கும்மியடி*

*கொங்கு நா டுதந்த சிங்கமவர் – உயர்*
*கோவைமா வட்டத்தின் பெரியாரவர்*
*உத்தமர் காந்தியின் உயர்சீடர் – என்றும்*
*சத்திய நெறிநின்ற சீலரவர்.*

நாட்டின்சு தந்திரப் போரினிலே – நிலை
நாட்டிநின் றார்தியாக வாழ்வினையே
வீட்டின்பம் வேண்டாது தொண்டுசெய்தார் – நம்
நாட்டுமக் கள்நலம் பெற்றிடவே

வித்யாலயம் தந்த வித்தகராம் – அய்யா
வீரர்ந ரேந்திரர் பக்தரவர்
பரமஹம்சரின் பாதத்தைப் போற்றி
பக்தை சாரதையைப் பணிந்தவராம்

நெஞ்சிலு ரம்கொண்ட நேர்மையாளர் – அய்யா
பஞ்சைநி கர்த்த மனம்கொண்டவர்
ஏழையெளியோர் வாழ்வில்வ ளம்பெறத்
தாழ்விலாப் பணிபல ஆற்றியவர்

கல்விசி றந்திட உழைத்தாரவர் – நாட்டின்
கல்விய மைச்சராய்த் திகழ்ந்தாரவர்
தாய்மொழிக் கல்விசி றந்திடவே – இன்பத்
தமிழ்கலைக் களஞ்சியம் படைத்தளித்தார்

இளையோரும் திருக்குற ளறிந்திடவே
வளமான பாடநூல் வகுத்திட்டார்
தெளிந்த நற் கல்வியைப் பெண்டிர்பயில
ஒளிமிகு சாரதா லயம் தந்தார்

'கிராமம்வ ளர்வதே காந்தீயம்' – என்ற
சீரான கொள்கையைக் கொண்டிருந்தார்
பல்வகைத் தொழில்கள் வளர்ந்திடவே – ஏற்ற
பொருளாதா ரக்கொள்கை வகுத்தளித்தார்

குழந்தையும் தெய்வமும் ஒன்றென்பார் — அவர்
மழலைய ரோடும்ம கிழ்ந்திருப்பார்
எளிமையில் இனிமை கண்டாரவர் — வாழ்வில்
தெளிந்தநற் கொள்கையில் சிறந்தாரவர்

'உழைப்பால் உயர்ந்திடு' என்று சொன்னார் — அய்யா
'பிறர்க்கென வாழ்ந்திடு' என்று சொன்னார்
'வாய், மனம், யாக்கையில் தூயராய் வாழ்ந்து
தாய்நாட்டிற் குழைத்திடு' என்று சொன்னார்.

○ ❖ ○

AVINASHILINGAM INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN (DEEMED UNIVERSITY)
150166
LIBRARY

# தவமென்ன செய்தீர் அய்யா!

திருமதி. வி.பி. ருக்மணி

*தவமென்ன செய்தீர் அய்யா... அய்யா*
*தவமென்ன செய்தீர் அய்யா... அய்யா*

*குழந்தைகள் உள்ள மெனும்*
*கோயிலிலே குடி கொண்டு*
*குன்றின் மேல் இட்ட*
*மணி விளக்காய் ஒளி வீச — தவமென்ன*

*தூய வெள்ளாடையுடன் துலங்குகின்ற தெய்வமாகி,*
*நேயமுடன் நம் நாட்டு விடுதலைக்கும் போராடி,*
*வளர் கல்வி நிலையம் தந்து குருதேவர் அருள் பெறவே*
*பார் போற்றும் உத்தமராய் காந்திவழிச் சீடராக — தவமென்ன*

*நல்ல நல்ல அய்யாவே*
*நாங்கள் போற்றும் அய்யாவே*
*திருப்பூர் தந்த அய்யாவே*
*திசைகள் போற்றும் அய்யாவே*

*ராஜாப் போல இருப்பவரே*
*ரோஜா மலர் அணிபவரே*
*கல்விக் கூடம் தந்தவரே*
*கலைகள் எல்லாம் வளர்த்தவரே*

ஆரம்பக் கல்விதனை
ஆர்வமுடன் கற்றிடவே
பள்ளியெமக்கு அளித்திட்ட
பாச மிகுந்த அய்யாவே

காந்திய சீடராம் எங்கள் அய்யா
கதராடை அணிபவர் எங்கள் அய்யா
குழந்தைகள் எங்களைக் கண்டு விட்டால்
குதூகலம் கொள்வார் எங்கள் அய்யா

அன்பாய் வணக்கம் சொல்லிவிட்டால்
ஆவலாய்த் தடவிக் கொடுத்திடுவார்
குழந்தைகள் எங்கள் மனதினிலே
குடியிருப்பாரே எங்கள் அய்யா

✢ ★ ✢

# ஆசார சீலர்

திருமதி. ஆர். சாந்தா

*அறிவுக் கண்ணை திறந்திட்ட ஆசாரசீலர்*
*அவினாசிலிங்கம் என்னும் அற்புத மனிதர்*
*அண்ணல் காந்தி வழியில் வந்த தியாக புருஷர்*
*அன்பு, சேவை, தூய்மை, பக்தியும் கொண்டார்*
*அக்கிரமம் செய்த வெள்ளையராட்சியை எதிர்த்தார்*
*அரிஜன உயர்விலும் அக்கறை மிகக் கொண்டார்*
*அறிவுக் கண்ணைத் திறந்திட வித்தியாலயம் அமைத்தார்*
*அருளாளன் சிவானந்தர் அன்பையும் பெற்றார்*
*அடிப்படையான சக்தி தெய்வ அருள் என்றிட்டார்*
*அமைச்சர் போன்ற பல பதவியும் மேற்கொண்டார்*
*அமுதமான தமிழில் ஆர்வம் மிகக் கொண்டார்*
*அடுக்கடுக்காய் பல சாதனைகள் புரிந்திட்டார்*

❊ ★ ❊

# உயர்ந்தவர்

திருமதி. ஆர். இராஜலட்சுமி

அண்ணல் காந்தி அடிச்சுவட்டை பற்றிய மனிதர்
அவினாசிலிங்கம் என்னும் அற்புத மனிதர்

ஆயிரம் பிறை கண்டு சாதனை படைத்தவர்
ஆன்மீகத் துறையிலும் ஆழ்ந்த பற்று உடையவர்

இறைவனடி மறவா கல்வி ஆலயம் வளர்த்தவர்
இந்தியாவின் பெருமையை உலகு அறியச் செய்தவர்

ஈடில்லா கல்வியைச் செல்வமாய் போற்றியவர்
ஈகையில் சிறந்தவராய் தன்னலம் அற்றவர்

உடல் பொருள் ஆவி அனைத்தும் கல்விக்காய் தந்தவர்
உண்மை நேர்மை அன்பினால் உயர்ந்திட்ட மாமனிதர்

ஊன் உறக்கம் இன்றியே தேச சேவை செய்தவர்
ஊக்கம் பெண்மைக்கு தந்த உயர்ந்த மனிதர்

எண்ணில்லா விடுதலைப் போரில் ஈடுபட்ட தியாகி
என் கடன் பணி செய்து கிடப்பதே என்றார்

ஏற்ற மிகு பலபட்டம் வாங்கிய சாதனையாளர்
ஏராளமான துறையில் கடுமையாய் உழைத்தவர்

ஐயா என்று எல்லோரும் அழைக்கும் பேறு பெற்றவர்
ஐயமின்றிக் கல்வியைக் கற்க வழி செய்தவர்

ஒருபோதும் வீணாக காலம் கழிக்காதவர்
ஒழுக்க சீலராய் வாழ்ந்த பிரும்மசாரி

ஓயாது கல்விக்காய் உழைத்திட்ட மாவீரர்
ஓங்காரத்தை ஓதும் உண்மைத் துறவி

ஔவை போல் உபதேசம் செய்வதில் வல்லவர்
ஔவை தந்த தமிழ் நூலில் ஆர்வம் மிகக் கொண்டவர்

இஃதெல்லாம் ஐயா என்னும் தியாகியின் சிறப்பாம்
இஃதெல்லாம் சிலவே இன்னும் பல உண்டாம்

✻ ❍ ✻

# அணையா ஜோதி

முனைவர். கே. குழந்தைவேல்

அன்பின் திருஉரு எங்கள் அய்யா
அவிநாசி லிங்கப் பெருந்தகையே
என்றும் பிறர்க்காய் வாழ்ந்திருந்தார்
எமக்குச் சாரதாலயம் தந்தார்
உன்னால் எல்லாம் முடியுமென்றார்
உலகுக்குச் சேவை செய்யென்றார்
என்றும் எம்மனக் கோயிலிலே
இருக்கும் அவர்தாள் மலர் போற்றி

ஆயிரம் ஆயிரம் வீடுகளில்
அணையா விளக்கினை ஏற்றிவைத்தார்
தாயினும் சாலப் பரிவுடனே
சலியா தளித்தார் சேவையினை
வாயினில் சொல்ல வார்த்தை யில்லை
வையகம் போற்றும் அவர் புகழை
சேயினும் மிகவே நாமவரை
தினம் தினம் நினைந்து போற்றிடுவோம்

கல்லும் கரைந்து கரைந்துருகும்
காந்தியின் சீடர் கதை சொன்னால்
அல்லும் பகலும் அடுத்தவர்க்காய்
அயரா துழைத்தார் பலகாலம்
சொல்லும் செயலும் ஒன்றாக்கி
தூய்மையைச் சிந்தையில் நிறைவாக்கி
நல்லவை எல்லாம் தம்பணியாய்
நாளும் நினைத்து செயல் செய்தார்

சாத்திரம் கோத்திரம் பாராமல்
சமயம் இனம் மொழி கருதாமல்
நேத்திரம் காக்கும் இமை போலே
நிதம் நிதம் காத்தார் மாணவரை
தோத்திரம் புகழுக்கு மயங்காமல்
துளியும் நேர்வழி பிசகாமல்
சூத்திரமாகப் பணி செய்தார்
அனைவரும் விரைவில் உயர் வெய்த

ஆண்டவன் பிள்ளைகள் அரும்பணியே
அழியா இன்ப நிலையென்றார்
ஈண்டவர் கண்ணில் நீர் துடைக்க
இன்பம் வாழ்வினில் சேர்ந்திடவே
கண்டவர் மலைத்திடக் கல்வியினைக்
கருத்தாய் வளர்த்து அவர்க்களித்தார்
எண்டிசை போற்ற வாழ்ந்திருந்தார்
எண்பத் தொன்பது ஆண்டிங்கு

தனக்கென ஏதும் சேர்க்கவில்லை
தமரென உறவினைக் கொள்ளவில்லை
மனத்தினில் கொள்கைகள் கொண்டவரை
மாறா தவ்வழி சென்றவரை
எனக்கென வாய்த்த உறவென்றார்
இனிய தம்பி தனயனென்றார்
கனத்த தனது பொருள் எல்லாம்
கல்விப் பணிக்கே உவந்தளித்தார்

பெருந்தவத்தர் குரு இராமகிருஷ்ணர் வீரத்
துறவி விவேகானந்தர்
அருமைச் சீடர் தாமானார்.
அவர் வழி தனது வாழ்வமைத்தார்
இருளை நீக்கும் விளக்கினைப் போல்
இன்னல் தீர்க்கும் மருத்துவர் போல்
பொருளே பெரிதெனும் மாந்தருக்குப்
பேரின்ப வழியை எடுத்துரைத்தார்

உண்டோ உலகில் இவர் போலே
உத்தமர் காந்தி வழிநின்றோர்
அண்டிய வெள்ளையர் ஆட்சியினை
அகற்றி விடுதலை நாடுபெற
சண்டைகள் ஏதும் செய்யாமல்
சத்திய வழியில் மறியல் செய்தார்
கொண்டார் கொடிய சிறை வாழ்க்கை
குளிர்ந்த நெஞ்சுடன் நான்கு முறை
காந்தியின் வழியில் நாடு செல்ல
காங்கிரஸ் தலைமைப் பொறுப் பேற்றார்
சாந்திப் போரின் தத்துவத்தை
சமத்துவ வாழ்வின் தேவையினை
பாந்த முடனே யாவருக்கும்
பக்குவ மாக எடுத்துரைத்தார்
இந்திய மத்திய சபைதனிலே
இளமையில் அங்கத்தினர் பொறுப் பேற்றார்

சென்னை மாநில அமைச்சரானார்
சிறப்புடன் மிகப் பல பணிசெய்தார்
அன்னைத் தமிழின் நிலையுயர
அணையா பணிகள் துவக்கிவைத்தார்
என்றும் வாழ்கலைக் களஞ்சியங்கள்
இரண்டினை நமக்கு அளித்து வந்தார்
குறையாப் புகழ்சேர் நூல்கள் பல
குவலயம் பயன்பெற எழுதிவைத்தார்

சிறுவர் முதல்முது கிழவர் வரை
படித்துப் பயன்பெறப் பள்ளிகளும்
குறுகிய காலப் பயிற்சிகளும்
கோயில் போல்கல் லூரிகளும்
பெறுதற் கரிய முனைவர் பட்டம்
முதலாம் பட்டப் படிப்புகளும்
பொறுமையுடனே ஒவ்வொன்றாய்
பேணி வளர்த்து நமக்கீந்தார்

பல்பொருள் பெயரில் கருத்தரங்கம்
பயன்மிகு கல்விச் செயலரங்கம்
சொல்லுதற் கரிய குருபூஜை தனில்
சோர்வுறா தமைத்தார் ஆண்டுதொறும்
அல்லும் பகலும் சிந்தித்து
அறிஞர் பலரைக் கூட்டுவித்து
கேள்விச் செல்வம் பெறுவீரென்று
சிகரத்தில் எம்மைச் சேரவைத்தார்

கல்விப் பணி செய்யும் மாந்தருக்கு
        கலங்கரை விளக்காய் வழிகாட்டி
நல்லோர் கூடும் சபைகளிலே
        நாயக னாக அவரிருந்தார்
பொல்லாச் செயலைச் சாடுவதில்
        பொய்ம்மை வாழ்வைப் போக்குவதில்
இல்லை என்றும் அவர்க்கிணையே
        இருந்தார் அஞ்சா நெஞ்சுடனே

கிடைத்தற் கரிய பட்டங்களும்
        பத்ம பூஷண் போன்றனவும்
அடைந்து அவரைச் சிறந்தனவே
        அனைவரும் மனதில் மகிழ்வெய்த
படைபடை யாயவர் மாணவர்தம்
        பணியைப் பார்த்த மக்கள்குழாம்
அடையும் மகிழ்வுக்கோர் எல்லையில்லை
        அய்யா சேவை தனைவியந்து

துவக்கிய பணியின் நிறைவினையே
        தினம் தினம் கண்டு மனமகிழ்ந்தார்
துவளா தென்றும் வளர்ந்திடவே
        தேவைகள் யாவையும் பூர்த்தி செய்தார்
அவச்சொல் என்றும் வாராமல்
        பணிகள் தொடர்ந்து முன்னேற
நவநவ யோசனை பலகூறி
        நலஞ்சேர் விதிகள் ஆக்கி வைத்தார்

பூர்த்தியாய் யாவும் செய்துவிட்டு
பொறுப்பினைத் தகுந்தவர் கையில் விட்டு
நேர்த்தியாய் நிறைந்த முழு வாழ்வும்
நிலைத்த புகழுடன் வாழ்ந்து விட்டு
கார்த்திகை மாத சோதியினில்
கலந்தார் இறைவன் அடி சேர்ந்தார்
யார்க்கு வாய்க்கும் இவர் போலே
பக்தியும் சேவையும் நிறை வாழ்வு

போற்றி போற்றி போற்றியையா
பொன்னடி போற்றிப் பணிந்திடுவோம்
சாற்றி சாற்றி அவர் புகழைச்
சலியா தென்றும் பாடிடுவோம்
நாற்றிசை தோறும் அவர் பணிகள்
நாளும் வளர்ந்து சிறப்பெய்த
ஆற்றிடுவோம் தினம் ஆற்றிடுவோம்
அயரா தென்றும் அவர் பணியை.

* * *

AVINASHILINGAM INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN
150166
LIBRARY

முதன்மையர் மற்றும் மனையியல் பேராசிரியராகவும், மனையியல் புலம், புதுதில்லி மத்திய அரசின் செவிலியர் கல்லூரியின் உணவியல் பேராசிரியராகவும் (1951–53) பணியாற்றியுள்ளார்கள. தேசிய மற்றும் பன்னாட்டு அமைப்புகளில், ஆலோசனை வழங்கும் பதவிகளை வகித்து வருகிறார்கள். நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், 250 கட்டுரைகளையும், 40 புத்தகங்களையும் வெளியிட்டு இருப்பதோடு, உலகத்தின் பல பாகங்களில் பயணம் செய்துள்ளார்கள். தேசிய, பன்னாட்டு விருதுகள் பல பெற்றுள்ளார்கள். அவற்றுள் இந்திய அரசின் பத்மஶ்ரீ விருது, பல்கலைக்கழக மானிய குழுவின் ஹரி ஓம் ஆசிரம் விருது, அமெரிக்க நாட்டின் ஆரிகன் மற்றும் ஓஹியோ மாநில பல்கலைக் கழகங்கள் வழங்கிய மனித நேயத்தில் டாக்டர் பட்டம், கான்பூர் சந்திரசேகர் ஆஷாத் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் சிறப்பு டி.எஸ்ஸி. பட்டம் ஆகியவை அடங்கும். அய்யா டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களுடன் 50 வருடங்கள் சேவை செய்துள்ளார்கள். இந்தியப் பெண்களுக்குப் பொருத்தமான இந்திய கலாச்சாரத்தின் அடிப்படையில் ஒரு மனையியல் கல்லூரியை உருவாக்க வேண்டும் என்ற கனவை அய்யா அவர்கள் நிறைவேற்றித் தந்தார்கள். கோவையில் அவினாசிலிங்கம் நிறுவனம் தொடங்கியதிலிருந்து, டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அதன் ஆலோசகராக செயல்பட்டு, 1960–லிருந்து அதன் முதல்வராகவும், பின்னர் துணைவேந்தராகவும், டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் மறைவுக்குப் பிறகு வேந்தராகவும், நிர்வாக அறங்காவலராகவும் செயல்பட்டு வருகிறார்கள். டாக்டர் இராசம்மாள் பா. தேவதாஸ் அவர்களின் இடையறாத உழைப்பின் விளைவாகப் பல்கலைக்கழகம் விரிவடைந்து உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது.



Avinashilingam University